## மறைமலை அடிகள் நினைவு மலர்

* * * * * * *



தனித்தமிழ் இயக்கம் கண்ட தனிப்பெருந் தலைவா போற்றி
கனித்தமிழ் காக்கும் வீரர் கருத்தெலாம் நிறைவாய் போற்றி
பனித்திரை இந்தி வென்ற படரொளிச் சுடரே போற்றி
இனித்திட இதயப் பூவில் ஏகினாய் போற்றி போற்றி

துள்ளிடும் பகையைத் தூற்றித் தூள்செய்யும் புயலே போற்றி
எள்ளிடும் அடிமை வாழ்வை எரித்திடும் நெருப்பே போற்றி
வெள்ளநீர்ப் பேச்சால் வெற்றி விளைத்திடும் முகிலே போற்றி
வள்ளுவர் ஆண்டு தந்த வள்ளியோய் போற்றி போற்றி.

# குறள் நெறி

தமிழ் வாழ்க

24 பக்கம்

விலை 25 காசு



ஆசிரியருடன் தமிழவேள் மு. கருணாநிதி

# குறள் நெறி

ஆசிரியர்:
டாக்டர் சி. இலக்குவனார், எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.

| மலர் 2 | திருவள்ளுவராண்டு 1996 ஆனித்திங்கள் 31<br>15—7—65 | இதழ் 13 |
|---|---|---|


## பொருளடக்கம்


*முழங்கு சங்கே!* ... 3

*மறைமலை அடிகளாரின் கொள்கையும் வாழ்க்கையும்* ... 4

*மாண்புமிகு மறைமலை அடிகளார்* ... 5

*காங்கிரசின் மொழிக்கொள்கை அன்றும் இன்றும்* ... 6

*மும்மொழித் திட்டம்* ... 9

*குறள் அரங்கம்* ... 11

*தமிழ் வழியாகப் படித்தல் (தலையங்கம்)* ... 12

*தொல்காப்பிய விளக்கம்* ... 14

*இலக்கியக் காதலும் இன்றைய காதலும்* ... 16

*வள்ளுவர் ஆண்டும் கிருத்துவின் ஆண்டும்* ... 18

*பொற்பூவை* ... 22


★


குறள்நெறி அச்சகம்

திருப்பரங்குன்றம்
மதுரை-5.

எல்லாவிதமான அச்சு வேலைகளும் குறித்த காலத்தில் குறைந்த கட்டணத்தில் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

'குறள்நெறி' அச்சகத்தில் அச்சிடுவது 'குறள்நெறி'த் தொண்டுக்கு உதவுவதாகும்.


மறைமலை போற்றி வண்டமிழ் காப்போம்

# முழங்கு சங்கே!

முருகபாரதி

அங்காந்து திரிகின்ற அடிமைக் கள்ளா
அலறியோட அறிவென்னும் சாட்டை வீசி
இங்கொன்றும் அங்கொன்றும் நாடித்தின்னும்
இறுமாந்த தறுதலைகள் இதயம் கூசி
வெங்காயச் சருகுபோல் வெளுத்து நீங்க
வெலவெலத்து வடமொழிக்கி றுக்கர் ஏங்கச்
சிங்கநடை போட்டுவந்த செம்மல்—வேந்தன்
செங்கிளியே யாரென்று செப்பு வாயோ?

இந்தியெனும் தடிமாடு கூத்துப் போட
இங்கிருந்து முண்டங்கள் ஒத்துப் பாட
மந்திக்கைக் கொள்ளிபோல மடமை சூழ
மயக்கத்தைப் புல்லியர்கள் மாந்தி யாழக்
கொந்தளிக்கும் நெஞ்சத்தில் அமைதி யூட்டிக்
கொள்கையிலாக் குரங்குகளின் வாயைக் கட்டிச்
செந்தமிழே உயிரென்று சிந்தை கொண்ட
சீராளன் பேரெதுவோ செங்கால் நாராய்!

வடமொழியே தெய்வமொழி யென்று பித்தர்
வாய்கிழியக் கத்திஓய்ந்த வேலை கண்டு
படம்விரித்த பாம்பாகச் சீறிக் கொண்டு
பைந்தமிழின் மேன்மையினைப் பகர்ந்து பாரில்
குடம்கண்ட விளக்காகக் குன்றிப் போன
கன்னித்தமிழ்ப் பெருமைக்குக்கடைக்கால்இட்டுத்
திடமாகத் தனித்தமிழின் தெளிவு தேர்ந்த
திருவரசன் பேரெதுவோ சாற்றாய் காற்றே!

பொங்குகின்ற கடல்போலப் பேரார் வத்தால்
பலப்பலஆ ராய்ச்சிநூல்கள் கூத்து நூல்கள்
தங்குபுகழ் வாழ்க்கைகாட்டும் ஊற்று நூல்கள்
தமிழ்ப்பெருமை நாட்டும்பூங் காற்று நூல்கள்
எங்கும்பேர் விளக்கிநிற்கும் ஏற்ற நூல்கள்
எல்லாமும் படைத்தளித்தே உலகில் என்றும்
மங்கிடாத புகழ்வடிவில் வாழும் வேந்தன்
**மறைமலை அடிகளென்று முழங்கு சங்கே!**

# மறைமலை அடிகளாரின் கொள்கையும் வாழ்க்கையும்

திருமுறைச் செல்வர், சிந்தாந்த தினகரன்
வித்துவான் மறை. திருநாவுக்கரசு — அடிகளார் மகனார்.

வாழ்வால் நலம்பெறவே பெரும்பாலோர் கொள்கைகளை மேற்கொள்கின்றனர். இவ்வகையில் அரசியற்றுறையில் நிற்போர் மிகப் பலராவர். மொழித்துறையிலும், சமயத்துறையிலும் இத்தகையோர் சிலர் பலருளர். சீர்திருத்த நெறிகளில் தலைப்பட்டோரிலும் இப்படிப்பட்டவருண்டு. கற்று, புகழ் பெற்று—செல்வம் மிகப்பெற்று—பட்டம் பதவி பெற்றோர்களில் ஒருசிலர் தவிர யாவருமே தம் வாழ்வு நலன்கட்காகவே கொள்கைகளை உருவாக்குவர். அல்லதழிப்பர். இவர்கள், தங்கட்குள்ள பல நலங்களையும் கொள்கைகளின் பேரால் மிகுவித்துக்கொள்கின்றார்கள். அக்கொள்கைகட்கு இடர்நேருங்கால் சற்றும் மானம்—நாணமின்றி ஏதேதோ காரணங்கள் கூறி—அல்லது அக்கொள்கைகளில் முன் தாம் கொண்ட கருத்துக்கள் தவறே என உண்மையை ஒப்புபவர்போல் பாசாங்குக் காட்டித் திரிவாரும் உளர் இவர்களை நோக்கித்தான் போலும், திருவள்ளுவர்

"சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு" — என்றார்.

ஆனல், இத்தகைய கூட்டத்தைச்சாராது தமது கொள்கைகட்காகவே வாழ்ந்தவர்களில் இவ்விருபதாம் நூற்றாண்டில் எங்கையாரும் ஒருவர். அடிகளின் தலையாய கொள்கைள் பகுத்தறிவுக்கொத்த முக்காலத்துக்கும் ஏற்ற சிவநெறிக் கொள்கைகளும் தமிழ் மொழிக் கொள்கைகளுமேயாம். இவற்றில் அடிகளுக்கு எவை சிறந்தன என்ற பேச்சுக்கே இடமில்லை. இரண்டையும் இரு கண்களெனப் போற்றினர். உண்மைத் தமிழ் நெறி நிற்பார் மேற்கொள்ள வேண்டிய கருத்துக்களையே அடிகள் விடாப் பிடியாக நின்று உருவாக்கித்தந்துள்ளார். அவைகள் நடுநின்று ஆராய்ந்துகண்ட அரும் பெரும் நூல்களாகத் திகழ்கின்றன. அவர்கள் பேச்சும், வாழ்வும் அவ்வாறே திகழ்ந்தன. அவர்கள் ஆண்டாண்டுகளாக ஆழ்ந்து ஆராய்ந்து தவமிருந்து கண்ட அருங்கருத்துக்களைத் தம் வாழ்வில் செயற்படுத்தியுங்காட்டினார்கள். அடிகளின் தொண்டுகள் தொடங்கப்பட்ட காலத்தில்,

தமிழ்நாட்டில் எங்குப்பார்த்தாலும் ஆரிய மொழியும், ஆங்கிலமும் தலை விரித்தாடின. தமிழ் என்று தமிழன் என்று—தமிழினம்என்று—நாகரிகமென்று யாரும் பேசிவிட முடியாது. எங்கும், எதிலும் நீக்கமின்றி நிறைந்திருந்தன ஆரியமொழி ஆக்கமும், ஆங்கில வீககமும் அவற்றைத் தெய்வமெனப் போற்றித் தன்னலத்தை வளர்க்கும் வழி வழி வந்த வைதிகக் கூட்டங்களும். இக்கூட்டங்களைச் சார்ந்தோர் "மெல்லத் தமிழினிச்சாகும்" என்றுரவாரித்தனர்.

அரசியல் மட்டுமல்ல சமயம், சமூகத்துறைகளிலும் இவர்கள் வைத்ததுதான் சட்டம். இந்நிலையிற்றான் அடிகளார் காரிருளைக்கிழித்துக்கொண்டு செந்தமிழ் ஞாயிறுகத் தோன்றினர். தனித்து நின்றார். துணையொருவருமிலர். தமிழ் மொழி வடமொழியின் துணையின்றித் திகழும் ஆற்றலுடையதெனப் பேசினர்; நூல்கள் எழுதினர். அவ்வளவுதான், ஆரியப் பழமை பாராட்டுங் கூட்டம் ஆயிரமாயிரம் முனைகளில் நின்று தாக்கின. தமிழ்ப்புலவோர் பலரும் அவருக்கஞ்சி ஒதுங்கினர். அல்லது அவர்களுடன் கூடிக்கொண்டனர். இன்றும் அப்படித்தானே' நம் **இலக்குவனர் தமிழே பயிற்சி மொழி** என்றால் பெரும்பாலான பட்டம் பதவி பெற்றுள்ள தன்னலத் தமிழ்ப் புலவர்கள் — இந்தியை மட்டும் எதிர்த்து ஆங்கிலத்தைப்போற்றிப்புகழ்பாடித்தமிழ்ப்பயிற்சி மொழி என்பதனைக் கூறுது மறைகின்றனரல்லரோ? நம்மருமை பெருமைகட்குரிய **இலக்குவனர்** போல எத்துன்பத்தையும் பொருட்படுத்தாது அடிகள் சிவபெருமான் திருவருளில் பதிந்த நெஞ்சினராய்

நாமார்க்குங் குடிஅல்லோம் நமனை
அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை
அல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை.

[திருநாவுக்கரசர் தேவாரம்]

[தொடர்ச்சி 21-ம் பக்கம்]

# மாண்புமிகு மறைமலை அடிகளார்

செல்வர்

தமிழ் ஒருமொழியா? அதுவும் மூத்த மொழியா, முதல்மொழியா? அதனுல் தனித்தியங்க முடியுமா? அம்மொழிக்கு எழுத்துண்டா? இலக்கண, இலக்கிய முதன்மை உண்டா?–இவ்வையங்கள் எங்கோ, எவருடைய உள்ளத்திலோ தோன்றிய ஐயங்களல்ல; கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடி மக்கள் வாழ்ந்த தமிழகத்தில்–முக் கழகங்கள் வைத்து, முத்தமிழை ஆய்ந்து எண்ணற்ற கருத்துப் பேழைகளை உலகிற்களித்த தமிழகத்தில் எழுப்பப்பட்ட ஐயங்கள், நற்றமிழின் நலமுணராத் தமிழக மக்கள் சிலர் உள்ளங்களிலும் எதிரொலித்துக் கொண்டிருந்த ஐயங்கள்; இவ்விருபதாம் நூற்ருண்டின் முற்பகுதியில் முளைத்த ஐயங்கள்.

உடனே தமிழைக் கற்று அதனுற் பேரும் புகழும் பெற்றுள்ள புலவர் பெருமக்கள் ஒருங்கிணைந்து, பல முனைகளிலும் ஆய்ந்து தெளிந்த விளக்கங்கள் கூறி இவ்வையங்களை அகற்றி இருப்பர்; நற்றமிழின் தொன்மையையும் வன்மையையும், இனிமையையும் செப்பி, இவ்வையங்கொண்டோரின் உள்ளத்தைச் செம்மையாக்கியிருப்பர்; சிறந்த மறுப்புக்கள் கூறிக் கறைபடிந்த அவர்தம் எண்ணங்களை மாற்றியிருப்பர் என நாம் எண்ணலாம். இல்லை...... இல்லை...... இத்தகைய உணர்வும், தெளிவும், விரைவும், உறுதியும், வினையாற்றலும் தமிழ்ப் புலவர் பெருமக்கள் அனைவர்க்கும் இருந்திருப்பின் உயர்தனிச்செந்தமிழ் உலகையே ஆண்டிருக்குமே! தமிழ் மக்களும் உயர்ந்தோங்கித் திகழ்ந்திருப்பரே!

ஆயினும் என்...... 'ஆர்ந்த அழகு –உளங்கவர் தோற்றம்–நிரம்பிய புலமை–சிறந்த நுண்ணறிவு–விரிந்துயர்ந்த தமிழ் நெஞ்சம்–இத்துணையும் கொண்டிலங்கும் புலவரொருவர் எழுப்பிய முழக்கங்கள் இவ்வையங்கொண்டோரின் இருள் உள்ளத்தை ஒளிபெறச் செய்தன. அவர் ஆய்ந்தெழுதிய விளக்கங்கள் கோணலறிவை நேராக்கின. அப்புலவர் பெருமானே கன்னிணுமரிய கன்னித்தமிழைக் காத்தொழுகும் செந்தண்மைபூண்டுத் தம்புகழ் நிறீஇய மறைமலையடிகளாவார். அவர்தம் அரும்பணிகள் சிலவற்றை நோக்குவோம்.

ஒரு மொழியிலுள்ள ஒவ்வொரு சொல்லும் அம்மொழியின் வரலாற்றை நன்கறிவிக்கும் கருவி. எனவே ஒவ்வொரு சொல்லையும் எழுத்து, பேச்சு இருவகை வழக்கிலும் பயன்படுத்தி, வழக்காறழியாது காத்தல் அம்மொழி நலம்பேணும் நல்லறிவாளரின் செயலாம். ஆயின், தமிழர்தம்மை அடிமைப்படுத்தி, அவர்தம் மொழியையும் அழிக்கத் திட்டமிட்டிருந்த ஆரிய மைந்தரும், அவர்தம் திருவடித்தொண்டு புரிந்த தமிழ் கற்ற தமிழ் மக்கள் சிலரும், எண்ணற்ற வடசொற்களையும், ஆங்கிலச் சொற்களையும் நற்றமிழிற் கலந்து, அதன் தனித்தன்மையைக் கெடுத்துவந்தனர். 'பண்டு தொட்டுத் தூயதாய் ஓங்கிநிற்கும் நம் தனித் தமிழ்த்தாயைப் பிறமொழிச் சொற்களென்னும் கோடரியினுள் நுழைத்துக்கொண்டு, தமிழ்ப் புதல்வர் வெட்டிச் சாய்க்க முயலும் கொடுமையினைக் கண்டு, மறைமலை அடிகள் உள்ளங்கவன்ருர். தடுக்கவே தனித் தமிழ் இயக்கங் கண்டார். அன்றே 'சுவாமி வேதாசலம்' 'மறைமலையடி'களானுர். தனித் தமிழில் எழுதியும் பேசியும் வழிகாட்டி வந்தனர்.

அடுத்து, 1938-இல் நாட்டுத்தலைவர்கள் 'பொதுமொழி' என்னும் புதுமொழி கூறிப் புன்மொழியாம் இந்தியினைத் திணிக்கும் இழிசெயலைக் கண்டார். அவர்தம் பொய்யுரைகளையும், புனைந்துரைகளையும், புரட்டு வேலைகளையும் அறிந்தார். தூய, துணிவுடைய தமிழ் நெஞ்சம் இதுகண்டு பொறுக்குமோ? சோற்றுக்கு மானம் விற்கும் தற்காலப் பெரும் புலவர் கூட்டத்தைச் சார்ந்தவரல்லரே அவர்!

இந்தியின் வரலாற்றையும், வளமற்ற

[தொடர்ச்சி 24-ஆம் பக்கம்]

க்குமென்ற நிலைமையை ஆங்கிலேயர் டாக்கினர். அந்த நிலைமை உருவாக்கிய பாதையில் இந்தியரில் ஒரு பகுதியினர் யங்கினர்... தாய்மொழிப் பற்று கேலிக் குரியதாகியது."

"இந்தி பரீட்சையில் தேறினால்தான் நிரந் தரமாக உத்தியோகத்தில் வைத்துக்கொள் ளப்படும்"

டில்லி ஆட்சி பீடம் சுற்றறிக்கை, 1963.

"ஏற்கெனவே சேவையிலிருப்பவர் இந்தி மோர்சு தேர்வு பெற்றால் ஒவ்வொருவர்க்கு 50 உரு. வழங்கப்படும்." 19—10—57

"மாணவர்களே! இந்திபடியுங்கள். படிக்கா விட்டால் உங்கட்கு எதிர்காலத்தில் பிழைப் பில்லை"

வினோபாவே, திருச்சிப் பொதுக்கூட்டம்.

"கங்கைக்கரையிலிருந்து கன்னியாகுமரி வரை மதச்சடங்குகள் சமத்கிருதத்திலேயே நடைபெறுவதால் நாட்டின் கலாசார ஒற் றுமைக்கு இந்தியுடன் அம்மொழியும் இன்றி யமையாததாகிறது"

இராசேந்திரப்பிரசாத்.

இங்ஙனம், ஆட்சிக்குழுவின் உச்சியிலி ருந்து அடிவரையிலுள்ள ஆளுநர்கள், தேச பக்தர்கள், கட்சித்தலைவர்கள், முதல் ஒரே குர லில் மதச்சார்பை உட்படுத்திக் கூறியும், படிப் பவர்கட்கு "ஆசிரியப் பயிற்சி, சம்பளம், தேர்வுப் பரிசுகள், இலவசப் புத்தகங்கள் முதலிய அனைத்திற்கும் 1965-66-க்கு மட்டும் இந்திக்கு 2 கோடி செலவழிக்கப்போகிறோம்" என விளம்பரப்படுத்தி வருவது மக்கட்கு மயக்கமருந்து கொடுக்கும் நிலையன்றோ? இங் ஙனம் அந்நிய மொழிக் கொள்கையில் யாது மின்றே.

இலங்கை "பார்லிமெண்டில்" தமிழரசுக் கட்சியினரைப் பார்த்து "உங்கள் தாய் நாட் டில் தமிழ் ஆட்சி மொழியா" என்றும், பிறி தொருவர் "அங்குத்தமிழ்நாடு என்ற பெயர் வைக்க முடிந்ததா" என்றும் கேட்டனரே, இவை தாய்மொழிக்குரிய கேலிக்கேள்வி களன்றோ?

பண்டைத்தமிழக மன்னர்கள், புலவர் களிடம் வாழ்த்துப் பெறாத நாடும், அரசும் அழிந்து விடுமென்ற கொள்கையுடையவர்கள். அதனால் பாண்டியன் நெடுஞ்செழியன், "மாங் குடி மருதன் தலைவனாக... புலவர் பாடாது வரைக என்னிலவரை" எனத்தனது சூளுரையிலும் குறிப்பிட்டுள்ளான். (புறம். 72) அவ்வரசன் வாழ்ந்த மதுரையில், அம்மாங் குடி மருதனார் வழி வழி வந்த அரும் பெருந் தமிழ்ப் புலவர் பேராசிரியர், சி. இலக்குவனார் ஆவார். அண்மையில் "மாணவர்கள் தமிழ் கற்க மறுத்து விட்டனரே, அதற்கென ஏற் பட்ட படிப்பகம் மூடுவிழா நடத்த வேண்டிய தாயிற்றே" என்ற அமைச்சரின் குறைபாட் டைச் சரிப்படுத்தும் மனப்பான்மையுடன் அவர் சில தமிழ்ப்புலவர்களைத் துணைக் கொண்டு கால் நடைப்பயணமாக ஊரானூர் தோறும் தமிழ் கற்குமாறு சொற்பொழிவு களாற்றிக்கொண்டு சென்னை சென்று அமைச் சரிடம் சேதி தெரிவித்து வரலாமென்றுதான் திட்டமிட்டனர். அவ்வளவுதான். உடனே அவரை (இலக்குவனாரை) கொட்டடியிற்சேர்த் துப் பூட்டி விட்டனரே? இவ்விலங்கு, அவ ருக்கா? அவரது தாய்மொழிப்பற்றுக்கா? அல்லது தமிழுக்கா? இது எம்மொழிக் கொள்கையால் விளைந்த கேலிக்கூத்து?

3—"அந்த நிலையில்தான் இந்திய அரசிய லில் காந்தியடிகளின் சகாப்தம் ஆரம்பமாகி யது... அவர்களைக் காந்தியடிகள் இனம்கண்டு கொண்டார். உண்மையான இந்தியாவுக்கும் அவர்களுக்கும் வெகு தூரம் என்பதைத்தெளி வாகவுணர்ந்த அவர் மொழித்துறையில் மாபெரும் மலர்ச்சியை உருவாக்கினார்"

காந்தியடிகள் கனவுகண்ட உண்மை இந் தியா? மதச்சார்பற்றதாய் பிளவுபடாததாய், மக்கள் உரிமை முகிழ்த்த கூட்டாட்சியாய், "இராமராச்சியம்" ஆகத் திகழ வேண்டுமென் பது. அக்கனவு நனவாவதற்குக் குறுக்கிடும் இனம் யாதெனவுணர்ந்தார். பாகித்தான் பிரிவினைக்குக்காங்கிரசு மொழிக்கொள்கையும் ஒரு காரணமாயிருந்தாலும், பிளவுபட்ட இந் தியாவை ஒன்று படுத்தியது ஆங்கில மொழிக் கொள்கை யென்றுணர்ந்ததாலுமே "நண்பர் கள் வழக்காற்றிலுள்ள மொழியை விடுத்து இந்திய வாழ்வை ஆரியமயமாக்க முனைந்துள் ளனரென்பது வெளிப்படையாகத்தெரிகிறது" என மதச் சார்புபற்றிய தொனியுடன் காந்தி யடிகள் எழுதியது உன்னத்தக்கது. மேலும்

க்குமென்ற நிலைமையை ஆங்கிலேயர் டாக்கினர். அந்த நிலைமை உருவாக்கிய பாதையில் இந்தியரில் ஒரு பகுதியினர் யங்கினர்... தாய்மொழிப் பற்று கேலிக் குரியதாகியது."

"இந்தி பரீட்சையில் தேறினால்தான் நிரந் தரமாக உத்தியோகத்தில் வைத்துக்கொள் ளப்படும்"

டில்லி ஆட்சி பீடம் சுற்றறிக்கை, 1963.

"ஏற்கெனவே சேவையிலிருப்பவர் இந்தி மோர்சு தேர்வு பெற்றால் ஒவ்வொருவர்க்கு 50 உரு. வழங்கப்படும்." 19—10—57

"மாணவர்களே! இந்திபடியுங்கள்.படிக்கா விட்டால் உங்கட்கு எதிர்காலத்தில் பிழைப் பில்லை"

விநோபாவே, திருச்சிப் பொதுக்கூட்டம்.

"கங்கைக்கரையிலிருந்து கன்னியாகுமரி வரை மதச்சடங்குகள் சமத்கிருதத்திலேயே நடைபெறுவதால் நாட்டின் கலாசார ஒற் றுமைக்கு இந்தியுடன் அம்மொழியும் இன்றி யமையாததாகிறது"

இராசேந்திரப்பிரசாத்.

இங்ஙனம், ஆட்சிக்குழுவின் உச்சியிலி ருந்து அடிவரையிலுள்ள ஆளுநர்கள், தேச பக்தர்கள், கட்சித்தலைவர்கள், முதல் ஒரே குர லில் மதச்சார்பை உட்படுத்திக் கூறியும், படிப் பவர்கட்கு "ஆசிரியப் பயிற்சி, சம்பளம், தேர்வுப் பரிசுகள், இலவசப் புத்தகங்கள் முதலிய அனைத்திற்கும் 1965-66-க்கு மட்டும் இந்திக்கு 2 கோடி செலவழிக்கப்போகிறோம்" என விளம்பரப்படுத்தி வருவது மக்கட்கு மயக்கமருந்து கொடுக்கும் நிலையன்றோ? இங் ஙனம் அந்நிய மொழிக் கொள்கையில் யாது மின்றே.

இலங்கை "பார்லிமெண்டில்" தமிழரசுக் கட்சியினரைப் பார்த்து "உங்கள் தாய் நாட் டில் தமிழ் ஆட்சி மொழியா" என்றும், பிறி தொருவர் "அங்குத்தமிழ்நாடு என்ற பெயர் வைக்க முடிந்ததா" என்றும் கேட்டனரே, இவை தாய்மொழிக்குரிய கேலிக்கேள்வி களன்றோ?

பண்டைத்தமிழக மன்னர்கள், புலவர் களிடம் வாழ்த்துப் பெறாத நாடும், அரசும் அழிந்து விடுமென்ற கொள்கையுடையவர்கள். அதனால் பாண்டியன் நெடுஞ்செழியன், "மாங் குடி மருதன் தலைவனாக... புலவர் பாடாது வரைக வென்னிலவரை" எனத்தனது சூளுரையிலும் குறிப்பிட்டுள்ளான். (புறம். 72) அவ்வரசன் வாழ்ந்த மதுரையில், அம்மாங் குடி மருதனார் வழி வழி வந்த அரும் பெருந் தமிழ்ப் புலவர் பேராசிரியர், சி. இலக்குவனார் ஆகும். அண்மையில் "மாணவர்கள் தமிழ் கற்க மறுத்து விட்டனரே, அதற்கென ஏற் பட்ட படிப்பகம் மூடுவிழா நடத்த வேண்டிய தாயிற்றே" என்ற அமைச்சரின் குறைபாட் டைச் சரிப்படுத்தும் மனப்பான்மையுடன் அவர் சில தமிழ்ப்புலவர்களைத் துணைக் கொண்டு கால் நடைப்பயணமாக ஊரானூர் தோறும் தமிழ் கற்குமாறு சொற்பொழிவு களாற்றிக்கொண்டு சென்னை சென்று அமைச் சரிடம் சேதி தெரிவித்து வரலாமென்றுதான் திட்டமிட்டனர். அவ்வளவுதான். உடனே அவரை (இலக்குவனாரை) கொட்டடியிற்சேர்த் துப் பூட்டி விட்டனரே? இவ்விலங்கு, அவ ருக்கா? அவரது தாய்மொழிப்பற்றுக்கா? அல்லது தமிழுக்கா? இது எம்மொழிக் கொள்கையால் விளைந்த கேலிக்கூத்து?

3—"அந்த நிலையில்தான் இந்திய அரசிய லில் காந்தியடிகளின் சகாப்தம் ஆரம்பமாகி யது... அவர்களைக் காந்தியடிகள் இனம்கண்டு கொண்டார். உண்மையான இந்தியாவுக்கும் அவர்களுக்கும் வெகு தூரம் என்பதைத்தெளி வாகவுணர்ந்த அவர் மொழித்துறையில் மாபெரும் மலர்ச்சியை உருவாக்கினார்"

காந்தியடிகள் கனவுகண்ட உண்மை இந் தியா? மதச்சார்பற்றதாய் பிளவுபடாததாய், மக்கள் உரிமை முகிழ்த்த கூட்டாட்சியாய், "இராமராச்சியம்" ஆகத் திகழ வேண்டுமென் பது. அக்கனவு நனவாவதற்குக் குறுக்கிடும் இனம் யாதெனவுணர்ந்தார். பாகித்தான் பிரிவினைக்குக்காங்கிரசு மொழிக்கொள்கையும் ஒரு காரணமாயிருந்தாலும், பிளவுபட்ட இந் தியாவை ஒன்று படுத்தியது ஆங்கில மொழிக் கொள்கை யென்றுணர்ந்ததாலுமே "நண்பர் கள் வழக்காற்றிலுள்ள மொழியை விடுத்து இந்திய வாழ்வை ஆரியமயமாக்க முனைந்துள் ளனரென்பது வெளிப்படையாகத்தெரிகிறது" என மதச் சார்புபற்றிய தொனியுடன் காந்தி யடிகள் எழுதியது உன்னத்தக்கது. மேலும்

என்ன எண்ணினரோ "இலட்சியம் நிறைவேறிவிட்டது காங்கிரசை உடனடியாகக் கலைக்க வேண்டும்" எனவும் இறுதிக்காலத்திலெழுதி வைத்தனர். ஈதெல்லாம் எவ்வினத்தைக் குறிப்பது? மேலும் மொழித்துறையிலவர் ஈடுபட்டதாகவும் தெரிந்தில.

4—"அதனால் மொழி அடிப்படையில் தமிழ் நாடு காங்கிரசுக் கமிட்டி, ஆந்திரப்பிரதேசக் காங்கிரசுக் கமிட்டி போன்ற மொழிவாரி மாகாண அமைப்புகள் ஏற்பட்டன."

பதவி ஏற்புக்கு முன்பிருந்ததை அன்றைய காங்கிரசு என்றும், பதவி ஏற்புக்கும் ஆட்சி மாற்றத்துக்கும் இப்பாலுள்ளதை இன்றைய காங்கிரசு என்றும் இருவேறு வகைப்படுத்தலாம். 1905 திலகர்காலத்திலேயே மொழிவாரி மாநிலம் அமைப்பது தான் நோக்கம், என்று அன்றைய காங்கிரசு அறிவித்தது. பின்னர் கராச்சித் தீர்மானங்கள் 18ல் "மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்படல் வேண்டும்" என்பது ஒன்றாகும். அதன்படி மாநிலங்கள் தோறும் "காங்கிரசுக் கமிட்டி"கள் பிரித்தும் அமைக்கப்பட்டன. இப்பணிகள் எதற்காக வெனில், மாநில மக்களை மொழிவாரியாக ஒன்று படுத்தல் எளிது. இங்ஙனம் பலமொழி பேசும் மாநிலங்களைப் பல வேர்கொண்ட ஒரு மரம்போல் ஒன்றிப்புச் செய்துவிடின் வெள்ளையனை வெளியேற்ற வாய்ப்பாக இருக்குமென்ற எண்ணம். "எண்ணிய வெண்ணியாங்கெய்திய"பின் இன்றைய காங்கிரசு? மாநில அமைப்புகளை அரசியலில் கொண்டு வருதலையும், முன்பளித்த வாக்குறுதிகளையும் மறுக்கத் தொடங்கிவிட்டது. ஏன்? அங்ஙனம் செய்யின் மாநில மொழிகள் ஆக்கம் பெறும். அதனால் இந்தியின் செல்வாக்கும் குறையும். மாநிலங்கள் பிரிந்தும் செல்லலாம் என்றெல்லாம் "நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்" என்றபடி, கரவெண்ணங்கொண்டதாலேயாம்

"இந்நாட்டில் மொழிவாரிக் கிளர்ச்சியின் மூலம் பிரிந்துபோகும் மனோபாவம் தலைதூக்குகிறது. காங்கிரசுத் தலைவன் என்ற முறையில் விட்டுக்கொடுக்காது எதிர்க்க வேண்டியவனாகிறேன். நேரு-புதுதில்லி 22—8—54.

"இனி மொழிவாரி மாகாணங்கள் கேட்பது கூடாது. கொடுக்கப்போவது மில்லை"

நேரு 2—10—53, சென்னை.

இன்றைய காங்கிரசின் வாக்குறுதி மாறலுக்கு இக்கூற்றுக்கள் சான்றுவனவாம். பின்னர் மாநிலங்கள் ஒவ்வொன்றாக? உண்ணாவிரதம், கிளர்ச்சி, உயிர்ச்சேதம், பொருட்சேதம் முதலியவிலை கொடுத்து மாநிலப் பிரிவினைகள் பெற்றது நாடறிந்த வொன்று. இன்று மொழியுரிமையுடன் வாழ்வதற்கு இந்திக் கரடியுடன் முழு மூச்சாகப் போராட வேண்டிய கட்டம் நேர்ந்துளது. இதுதான் மொழித்துறையில் இன்றைய காங்கிரசு "மாபெரும் மலர்ச்சி" யாகும்.

"ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு"

அயலார் குற்றத்தைக் காணுமாறுபோல் ஒவ்வொருவரும் தங்குற்றத்தையுங் காண வல்லராயின் உலகிலுள்ள மக்கட்குத் தீங்கு நேரிடுமோ? என்பது பொருள். ("காண்பவருயிர்க்கு" என்பர் பரிமேலழகர். "உலகத்துள்ள உயிர்க்கு" என்பர் காளிங்கர்.)

இன்றைய இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்குக் காரணம் "தி. மு. க." என அவர்களைச் சிறை செய்தனர். பின் "பள்ளியாசிரியர்கள்" என்றனர். இப்போது "ஆங்கில விரும்பிகள்" என்கின்றனர். ஆனால் "இந்தி வெறி தான் காரணம்" என்ற நாடறிந்த தங்குற்றத்தைக் காணவோ, காணினும் கூறவோ முடியவில்லை இன்றைய காங்கிரசுக்கு. ஏன்? இந்தி வெறியரின் மேலாதிக்கம் காரணமாகும்.

மும்மொழித்திட்டம்-இது அமைச்சர் பக்தவச்சலனாரின் மூலமந்திரம். "கூடைக்குள்ளிருப்பது குள்ள நரி" என்றாங்கு இதனுளிருப்பது கட்டாய இந்தி. இது 1962-ல் தோன்றியது. இதன்படி "வடவர் தென்னாட்டுமொழி ஒன்று படிக்க மறுத்தால் அமல் படுத்தப்படவில்லை" எனக் கல்வியமைச்சர் சாக்ளா கூறிவிட்டார். இவ்வுழுத்துப் போன திட்டமெதற்கு?

15, மொழித்திட்டமும் 1954. காங்கிரசுச் செயற் குழுவின் தீர்மானமாகும். இதுவும் காரிய சாத்தியமன்றெனக் கைவிட்டதாகும். இந்தி எதிர்ப்பு வேகத்தைத் தணிப்பதற்கு ஏதேதோ கவைக்குதவாத் திட்டங்களைக் காட்டிக் கண் துடைப்பு நாடகம் நடத்தி வருகிறது இன்றைய காங்கிரசு.

1—"நாட்டின் ஐக்கியம் தான் முக்கியம். எதைத்தியாகம் செய்தும் நாட்டின் ஐக்கியத்தையும் கட்டுக்கோப்பையும் பாதுகாக்க வேண்டும்." (ஆபிரகாப் லிங்கன் பொன்மொழி)

2— இந்தியால் நாடு பிளவு படுமெனில் என் நெஞ்சையே பிளக்கு மெனினும் இந்தியைத் தியாகம் செய்வேன். 3— இந்தியாவின் ஐக்கியம் பாதுகாக்கப்படுமெனின் சீனமொழியெனினும் அதை ஆட்சி மொழியாக நான் ஏற்கத்தயார். 4— இந்தியாவில் இந்தியை ஒருபோதும் ஆட்சி மொழியாக்கவே முடியாது." இங்ஙனம் அலகாபாத் "ஐக்கோர்ட்" நீதிபதி. தாவன் அவர்கள் 13-3-65-ல் உள்ளூர்க் கல்லூரி ஆண்டுவிழாவில் கூறிய நீதிமொழிகளை இந்திக்காரரும், இன்றைய காங்கிரசும் நெஞ்சிற் பதிய வைத்து நாட்டின் ஐக்கியம் காக்க அரசியல் சட்டத்தைத் திருத்தி ஆவன செய்வரென நம்புகிறோம்.

# மும்மொழித் திட்டம்

பொன். தினகரன் எம். ஏ.,

**உள்ளப் புரட்சி**

தம் தாய் மொழியையேனும் முறையாக ஓதி உணரா அரசியல் தலைவர் பலர் நம் மாணவர் மூன்று மொழிகளைக் கட்டாயம் கற்றுத்தீர வேண்டும் என்று கருத்துக்கொள்வது விந்தையே. மொழிக்கல்வி கருப்பட்டி வாணிபமோ கருவாட்டு வாணிபமோ அன்று அறிவியல் ஒன்றைக் கற்பதினும் அயல் மொழி ஒன்றைக் கற்பது பன்மடங்கு கடினம். குழந்தைப் பருவ முதல் ஒருவன் உள்ளத்தில் எண்ணங்கள் உருப்பெறும் முறையினை – நெறியினை – அவன் தாய்மொழி காட்டுகின்றது. தன் தாய்மொழியல்லாத வேறுமொழி ஒன்றை ஒருவன் பயிலுங்கால் அவன் உள்ளத்தில்– எண்ணும் முறையில் – ஒரு பெரும் புரட்சியே நிகழ்கின்றது என்று சொல்ல வேண்டும்.

நாம் ஒரு குறிப்பிட்ட மரத்தை வேம்பு எனத் தொன்று தொட்டு எண்ணி வருகிறோம் அதனையே ஆங்கிலேயர் Margosa என்று எண்ணி வருகின்றனர். 'நான் மதுரை சென்றேன்' என நாம் எண்ணும் நிகழ்ச்சியை ஆங்கிலேயர் I went to Madurai என எண்ணுகின்றனர். இதில் வெறும் ஒலி வேறுபாடும் சொல் வேறுபாடும் மட்டுமே இருப்பதாக எண்ணற்க தமிழில் எண்ணுவது போல ஆங்கிலத்திலும் ஆங்கிலத்தில் எண்ணுவது போலத் தமிழிலும் எண்ணிப்பார்மின். 'I Madurai went' என்றால் ஆங்கிலமாகுமா; 'நான் போனேன் கு மதுரை' என்றால் தமிழாகுமா? எனவே ஆங்கிலேயரைப்போல ஒலிக்கவன்று ஆங்கிலேயரைப்போல எண்ணக்கற்பதே உண்மையில் ஆங்கிலம் கற்பதாகும். மும்மொழி கற்பதென்றால் மூன்று வகையாக எண்ணக்கற்பது என்பது பொருள், இப்படி எண்ணுவதில் என்ன இடர்ப்பாடு இருக்கிறது என்று சிலர் கேட்கலாம். குழந்தைப்பருவம் முதல் பாட்டியிடம் வளரும் பிள்ளை பாட்டியை அம்மா என்று அழைத்துப் பழக்கப்பட்டுவிடும். பின்னர் பாட்டி என்று அழைக்கச் சொன்னால் அழைக்கத் தயங்கும்; இடர்ப்படும்.

'அம்மா வந்துச்சி' அக்கா போச்சு' என்று பேசும் ஒருவரை 'அம்மாள் வந்தார், அக்காள் போனார்' என்று பேச வேண்டும் என்றால் மறுத்து விடுவார். இச்சிறு மாற்றங்களுக்கே முறையான மாற்றங்களுக்கே மனம் பெரிதும் இடர்ப்படுகின்றது. வேற்று மொழி கற்கும்போது எத்தனை மாற்றங்கள்; தாம் இதுவரை ஒலித்துப்பழக்கப்படாத ஒலிகள், உச்சரிப்பு முறைகள், பொருள் மரபுகள், மாறுபட்ட சொற்றொடர் அமைப்பு, பால்பாகுபாடு போன்ற இலக்கணக் கூறுகள்; இவ்வளவு மாற்றங்கள் கண்டால் மனம் இடர்ப்படாமல் என் செய்யும்; குழம்பாமல் என் செய்யும்.

"இடர்ப்பாடு இருக்கலாம் அதனாலென்ன பல மொழி தெரிந்தவர்களும் நம்மிடையே இருக்கத்தானே செய்கிறார்கள், என்று மீண்டும் சிலர் கேட்பர்.

குரலை மாற்றி; திரைப்பாடகர் பலரைப் போன்று பாடவும் மேடைப் பேச்சாளர் பலரைப் போன்று பேசவும் சிலரால் இயலுவதால் எல்லோரும் அவ்வாறே குரலை மாற்றிப் பாடவும் பேசவும் வேண்டும் என்றால் பொருந்துமா?

வியட்நாம் போன்ற சில நாடுகளில் அடிக்கடி இராணுவப்புரட்சி நிகழ்ந்து ஆட்சி மாறுவதால் அவ்வாறே எல்லா நாடுகளிலும் நல்லரசு அடைய இராணுவப் புரட்சி நடந்தே தீர வேண்டும் என்று கருதுவது பொருந்துமா?

**முறுக்கு உழக்கும் உள்ளமும்**

இருவகையான முறுக்கு உழக்குகள் உண்டு. ஒரு வகையில் அடித்தட்டு உழக்கோடு பொருத்தப்பட்டிருக்கும். ஒரே வடிவான முறுக்குகள் தாம் இவ்வகை உழக்கால் பிழிய இயலும். மற்றொரு வகையில் அடித்தட்டு உழக்கோடு பொருத்தப்பட்டிராது; விருப்பம் போல் மாற்றிக்கொள்ளத்தக்க ஐந்தாறு தட்டுகள் தனியே இருக்கும். இவ்வகை

உழக்கால் பல வடிவில் முறுக்குகள் பிழிய இயலும்.

இருவகை முறுக்கு உழக்குப்போல இருவகை உள அமைப்பு மனிதரிடையே காணப்படுகின்றது. 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்ற பழமொழிக்கிணங்க ஒரே வகையாக; தாய்மொழி அமைப்பிலேயே எண்ணக்கூடிய உள அமைப்பு முதல் வகை. பல மொழி அமைப்பிற்கேற்ப பல வகையாக எண்ணக் கூடிய உள அமைப்பு இரண்டாம் வகை. இவற்றில் முதல் வகையே பெரும்பான்மை; இரண்டாம் வகை மிக மிகச் சிறுபான்மை.

## மொழியும் அறிவியலும்

பெரும்பாலோர் உள இயல்புக்கு ஏற்பக் கல்வித்திட்டங்கள் அமைக்கப்படவேண்டுமே அல்லாமல் சிறுபாலோர் உள இயல்புக்கு ஏற்ப அமைக்கப்படுதல் முறையன்று: உளநூற்படி கல்வி முன்னேற்றத்திற்கு அஃது உகந்ததுமன்று. மேலும் பல மொழிகளை எளிதில் பயிலும் இயல்புடையார் பிறரைக்காட்டிலும் அறிவாற்றல் மிக்கவர்கள் என்று கூறமுடியாது. மாறாகப்பிறமொழிப்பயிற்சியில்போதிய தேர்ச்சிகாட்ட இயலாத மாணவர் பலர் அறிவியலில் தனிசிறந்துவிளங்குவதைக்காணலாம். எதையும், ஏன், எதற்கு எப்படி? என்று வினவுகின்ற உளப்போக்கு அறிவியற் கல்விக்கு மிகமிக இன்றியமையாதது ஆனால் பிறமொழிக் கல்விக்கோ எதையும்வினவுகின்ற உளப்போக்கு பெரும் இடர்ப்பாடாக அமையும்: ஏனெனில் அறிவியல் விதிகளைப்போல மொழிவிதிகள் காரண காரியத்தோடு பொருத்தி, தர்க்க நெறிப்படி அமைவன அல்ல.

சான்றாக, விலங்கியலில் வெப்பக்குருதி உயிர்கள், தட்பக்குருதி உயிர்கள் என்று உயிர்கள் பிரிக்கப்படுவதற்கும் ஆரியமொழிகளில் ஆண்பால், பெண்பால், அலிப்பால் என்றுபெயர்ச்சொற்கள் பிரிக்கப்படுவதற்கும் உள்ள வேறுபாட்டை ஓர்ந்துணர்க.

விலங்கியற் பாகுபாடு விலங்குகளின் குருதிக்கேற்ப அமைந்துள்ளது. ஆனால்

நாள்—ஆண்பால்
நாக்கு—பெண்பால்
காது—அலிப்பால்

என்று பாகுபடுத்தும் ஆரிய மொழிகளின் பால் பாகுபாடு எதன் தன்மைக்கேற்ப அமைந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட தமிழ், ஆங்கிலச் சொற்றொடர்களின் அமைப்புக்களோடு உந்துவண்டியின் அமைப்பினை ஒத்துப்... தால் இஃது இன்னும் நன்கு விளங்கும்.

உந்து வண்டியில் சக்கரங்கள் கீ(ழே) பொருத்தப்பட்டுள்ளன. அவற்றை வே(று) எங்கு பொருத்தினும் வண்டி ஓடாது.

நான் மதுரைக்குச் சென்றேன்

I went to Madurai

இவற்றில் கு, to என்ற நான்காம் வேற்றுமை உருபுகளின் இடத்தை நோக்குக. தமிழில் ஊர்ப்பெயரை அடுத்தும் ஆங்கிலத்தில் ஊர்ப்பெயருக்கு முன்னர் வினையை அடுத்தும் வருகின்றமை காண்க.

தமிழில் 'நான் மதுரை சென்றேன்' என நான்காம் உருபு இன்றியும் வரும். வண்டி நகர்வதற்காகச் சக்கரங்கள் கீழேதான் பொருத்தப்படவேண்டும்; ஆனால் மேற்காட்டிய சொற்றொடர்களில் நான்காம் உருபு இன்ன காரணத்திற்காக இன்ன இடத்தில்தான் இருக்க வேண்டுமென்று கூறமுடியுமா? 'அந்த மொழியில் ஏன் அப்படி' 'இந்த மொழியில் ஏன் இப்படி' என்று துருவிக்கொண்டிருந்தால் மொழி கற்க இயலாது. மொழியின் விதிகளை மறவாமல் நினைவில் வைத்துக்கொண்டு அம்மொழியினரைப் போல எண்ணப்பழகுதல் வேண்டும்.

ஆனால் அறிவியல் விதிகளை நினைவில் வைத்துக்கொண்டால் மட்டும் போதாது; மரத்தினின்று பழம் ஏன் கீழே விழவேண்டும், விண்ணோக்கி விட்டெறிந்த பந்து மண்ணோக்கி ஏன் மீளவேண்டும் என்று அறிவியல் மேதை நியூட்டன் வினவியதுபோல வினவிக்கொண்டிருக்கவேண்டும். இப்படி வினவுகின்றவர்கள் தாமே இன்று பாரத கண்டத்திற்குத் தேவை. இப்படி வினவும் இயல்புடையாரை ஊக்குவிப்பதுதானே இன்றைய கல்வித்திட்டத்தின் நோக்கமாக இருக்கவேண்டும்.

## ஆர்வம் குலைக்கும் நாட்டைக் கெடுக்கும்

அறிவியல் கற்கும் ஆர்வமும் அதற்கான உள இயல்பும் வாய்க்கப்பெற்ற மாணவர்கட்கு இம் மும்மொழித்திட்டம் நிச்சயம் ஊக்கமளிக்காது. அவர்தம் ஆர்வத்தை உருக்குலைத்து நாட்டிற்கே ஊறு பயக்கும். இன்று நாட்டிற்கு மிகமிகத் தேவைப்படுவோர் பொறியியல் வல்லுநர்கள், தொழில்நுட்ப அறிஞர்கள், மருத்துவ மேதைகள்; இவர்களைப் போதியவளவில் உருவாக்க இம் மும்மொழித் திட்டம் ஒருபோதும் உறுதுணை செய்யாது.

(தொடரும்)

# குறள் அரங்கம்

வி. பகா. சு.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்
தானென்றாங்(கு)
ஐம்புலத்தா(று) ஓம்பல் தலை — (43)

வினா: தென்புலத்தார் எனும் சொல் தென் னாட்டினரைத் தமிழரைக்குறிக்கும் எனத் திரு. புலவர் குழந்தை அவர்கள் குறிப்பிட்டுள்ளார். தங்கள் கருத்தென்ன?

அன்பன்
இரா. கு. இராமசாமி,
இராவத்தூர், கோவை (மா.)

விடை: தென்புலத்தார் எனும் சொல்லுக்கு அழகிய அறிவையுடையார் என்று திரு. சி. இலக்குவனாரும் வ. உ. சிதம்பரம்பிள்ளையும் உரை வகுத்துள்ளனர். இச்சொல் கவிஞர் களையும் கலைஞர்களையும் குறிப்பதாகக் கொள் வதே சிறப்புடையதாகும்; பண்டைக் காலத் தில் கூத்தர், பாணர், விறலியர் முதலிய கலை ஞர்களையும் இயற்றமிழ்ப் புலவர்களையும் வள் ளல்களும் சிற்றரசர்களும் வேந்தர்களும் பொதுமக்களும் பெரிதும் ஆதரித்தனர். இதனைச் சங்க இலக்கிய வரலாற்றில் விரிவா கக் காணலாம். எனவே, கலைஞர்களையும் புலவர்களையும் ஆதரித்தல் சிறப்புடைய அற மாகும் எனப்பொருள் கூறலே பொருந்து வதும் பண்டைவாழ்க்கை வரலாற்றை விளக்கு வதும் ஆகும்.

தென்புலத்தார் என்றதற்குப் பரிமேலழ கர் பிதிரராவார் என்றும் அவர்கள் படைப்புக் காலத்து அயனால் படைக்கப்பட்டதோர் கட வுட் சாதி என்றும் விளக்கினர். பின்னர் இவ் விளக்கத்தை மறந்து இல்லறத்தார் இறந்த பின் தெற்குத்திசையில் தெய்வமாக இருக் கின்றனர். அவரே பிதிரர் என்று கருத்தறி வித்தது முன்னுக்குப்பின் முரணாகியது.

2. வினா:

உலகத்தோ(டு) ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். (140)

தப்பு செய்வார் பலர் இக்குறளைக் கூறித் தப்பிக்க நினைக்கின்றனர். எடுத்துக்கட்டாக வேலையில் அமரக் கையூட்டுக் கொடுத்தல் தப்பாகாதாம். ஏனெனில் அது உலகில் நடக் கும் அன்றாடச் செயலாம். இவ்வாறு புலவர் ஒருவர் கூறினர். இதை ஏற்றுக்கொள்ள லாமா?

அன்பன்
பூ. மணிவேலன்
மேட்டுப்பட்டி, தாதனூர்.

விடை:

எந்தச் சூழ்நிலையிலும் கையூட்டுக் கொடுத்து பெரும் வேலையினையோ, பாராளும் அரசியல் பதவியையோ பெறுதல் வள்ளுவ நெறியா காது. இக்குறளில் 'உலகம்' என்பது உயர்ந்த சான்றோர் பலரைக் குறிப்பதாகும். நூற்களில் கூறிய அறங்களுள் காலமாறுபாட்டால் சில தள்ளற் குரியனவாகும்; மேலும் அவ்வக்காலத் தில் சில அறங்கள் புதிதாக ஏற்படுத்திக் கொள்ளற்குரியனவாகும். இவ்வாறு தூய அறங்களை வகுக்கும் மெய்யறிவு நிலைச் சான் றோரைக் குறிப்பது 'உலகம்' எனும் சொல். சீரிய சான்றோர், நிலையறிந்து, நெறியறிந்து வகுக்கும் அறவொழுக்கத்தை ஒருவன் கடைப் பிடிப்பது அவன் கற்றதன் பயனாகும் என்பது குறள் கருத்து. அறிவு நிறை சான்றோர், கடுகளவு சிறிய இழிவுச்செயலைச் செய்வதால் கடவுளது மிகப்பெரிய ஊதியமே பெறுவதா யினும், அவ்விழி செயலைச் செய்யமாட்டார் என்பதே வள்ளுவம்.

இந்த உயர்நிலை அறக்கருத்தை வள்ளுவச வலியுறுத்திச் செல்லும் இடங்கள் வருமாறு:

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். (113)

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை. (348)

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை. (327)

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. (656)

பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழி நல் குரவே தலை. (657)

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். (954)

இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல். [961]

இவ்வுயிர்நிலைக்கருத்தானது உடலில் குருதி ஓட்டம் போன்று குறள் முழுமையும் நிலவுவதால், கையூட்டுக்கொடுத்துக் காரி யத்தை முடிக்கும் கயமைநெறி வள்ளுவர்க் குடன்பாடன்று என அறிக.

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே"

— தொல்காப்பியம்

குறள்நெறி ஆண்டுக்கட்டணம் உரூ. 6
,, இரண்டாண்டுக்கு ,, உரூ. 10

குறள்நெறி
தமிழ் வாழ்க

திருவள்ளுவராண்டு 1993 ஆனித்திங்கள் 31
15—7—62 மதுரை—6

*அடுக்கி வரினும், அழிவுஇலான் உற்ற
இடுக்கண், இடுக்கண் படும்.*

# தமிழ்வழியாகப் படித்தல்

தமிழ்வழியாகப் படித்தலே தமிழர் பிறப்புரிமையாகும் அதுவே அறிவைப் பெருக்கும் எளிய இனிய வழியாகும். ஆங்கிலேயர்க்கு அடிமைப்பட்ட நம் நாட்டிலேயன்றி வேறு எங்கணும் வேற்றுமொழிவழியாகப் படிக்கும் இயற்கைக்கு மாறுபட்ட நிலையைக் காண இயலாது.

தமிழர் தமிழ்மொழி வழியாகப் படித்தலே தக்கது என்பதனை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆட்சியாளர்கள், பல்கலைக் கழகத்தினர், கல்லூரி நடத்துகின்றவர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் ஆகிய அனைவரும் தமிழ்வழியாகப் படித்தலைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் செயலில் காட்ட முன்வருவதற்கு அஞ்சுகின்றனர்.

"தமிழ்வழியாகப் படிக்க வருவோர்க்கு உதவித் தொகையும் பிறவசதிகளும் அளிப்போம்" என்று கூறியும் மாணவர்கள் முன்வந்திலரே என்கின்றனர் ஆட்சியாளர்கள். "இப்போதுள்ள விதிமுறைகளின் படியே விரும்புவோர் தமிழ்வழியாகப் படிக்கலாம்" என்கின்றனர் பல்கலைக்கழகத் துணைவேந்தர். "எம் கல்லூரியில் மட்டும் தமிழ்வழியாகக் கற்பிக்க முன்வந்தால் மாணவர்கள் தொகை குறைந்துவிடுமே" என்று அஞ்சுகின்றனர் கல்லூரி நடத்துகின்றவர்கள். "தமிழ் வழியாகக் கற்பித்தலே எளிது; ஆனால் அவ்வாறு கற்பிக்க எங்கட்கு உரிமையில்லையே" என்கின்றனர் பேராசிரியர்கள். "தமிழ் வழியாகப் பயின்று பட்டம் பெற்றால் எங்கட்கு அரசுப் பணிமனைகளில் இடம் கிடைக்கும் என்ற உறுதியில்லையே" என்று[...]கின்றனர் மாணவர்கள்.

இன்று கல்வியின் உண்மைக்கு[...] கோளை எல்லோரும் மறந்துவிட்டன[...] படித்துப்பட்டம் பெற்றுப் பணிமனை[...]களில் அமர்ந்து ஊதியம் பெறுவதற்கு உதவுவதே கல்விப்பயிற்சி என எண்ணுகின்றனர். ஆகவே இப்பொழுதுள்ள சூழ்நிலையில் ஆங்கிலத்தின் வழியாகப் படித்துப் பட்டம் பெற்றால்தான் வேலை கிடைக்கும் என எண்ணுகின்றனர் ஆங்கிலத்தின் வழியாகப் பயின்றோரே உயர்ந்தோர் எனவும் தமிழ்வழியாகப் பயின்றோர் தாழ்ந்தோர் எனவும் அலுவலக வட்டாரங்களில் கருதுவோர் உளர். கல்வியின் குறிக்கோள் அலுவலகங்களில் பணிபுரிவதே எனக் கருதுகின்ற நிலை நீடிக்கின்றபோது தமிழ் வழியாகப் படித்தோர்க்குப் பணிமனைகளில் தவறாது இடம் கிடைக்கும் என்ற உறுதி ஏற்படச் செய்தல் வேண்டும். தமிழை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டுள்ள தமிழ் நாட்டரசு தமிழ்வழியாகப் படித்தோர்க்கே அரசு அலுவல்களில் முதலிடம் தருவோம் என்று அறிவித்தற்கு முன்வந்திலது. மாறாகத் தமிழக அரசுப்பணிக்கு விண்ணப்பம் செய்வோர்க்குத் தமிழறிவு வேண்டுமென்ற கட்டாயமில்லை என்று விளம்பரப்படுத்தியுள்ளது. ஆகவே தமிழ்வழியாகப் படித்தல் வேலை பெறுவதற்கு உதவி செய்யாது என்று மாணவர்கள் கருதுகின்றனர். தம் மக்கள் படித்துப் பட்டம் பெற்று ஏதேனும் ஒரு வேலையிலமர்ந்து பொருளீட்ட வேண்டுமென்று கருதுகின்ற பெற்றோர்களும் ஆங்கிலத்தின்வழியாகப் படிக்கவே தூண்டுகின்றனர்.

எனவே இயற்கைக்கு மாறுபட்ட வேற்றுமொழி வாயிலாகக் கற்றலைத் தடுக்கவேண்டுமென்றால் தமிழக அரசுப் பணிகள் தமிழ் வாயிலாகப் படித்தோர்க்கே முதலில் கிடைக்கும் என்று தமிழக அரசு அறிவித்தல் வேண்டும். தமிழர் தமிழ்வழியாகப் படித்தலே இயற்கையொடு பொருந்திய எளிய இனிய நெறியாகும். ஆதலின் அதனை மாணவர் விருப்பத்திற்கு விடாது கல்லூரிகள் அனைத்திலும் எல்லா வகுப்புக்களிலும் இனித் தமிழே பாடமொழி என அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். உயர்நிலைக் கல்விக்கூடங்களில் அவ்வாறுதான் தமிழ் பாடமொழியாக்கப் பட்டது. அதே முறையைக் கல்லூரிகளில் பின்பற்ற முன்வராமலிருப்பது ஏன்?

இந்தியக் கூட்டரசின் அலுவல் மொழியே பல்கலைக்கழகப் பாடமொழியாக இருத்தல் வேண்டும் என வடநாட்டுத் தலைவர்கள் பலர்

# பைந்தமிழைப் பல்கலைக்

...த்து அறிவித்துள்ளனர். அஃதாவது இந்...ய பல்கலைக்கழகப்பாடமொழியாக ஆக்கப்...டவேண்டும். ஆங்கிலத்தினிடத்தில் இந்தியே அமர்தல் வேண்டும் என்பதுதான் அவர்கள் விருப்பம். அதற்குத் துணை செய்யவே நம் ஆட்சியாளர்கள் தமிழைப் பாடமொழியாக்காது தட்டிக்கழித்து வருகின்றனர் என எண்ணவேண்டியுள்ளது. உண்மையாக அவ்வெண்ணம் நம் ஆட்சியாளர்க்கு இல்லையானால் உடனே தமிழைப் பாடமொழியாக்க ஆணை பிறப்பிக்கவேண்டும். புத்தகங்கள் இல்லை என்றோ தரம் குறைந்துவிடும் என்றோ கூறுவது சற்றும் பொருந்தாது. உயர்நிலைக் கல்விக்கூடங்கட்கும் இவ்வாறுதான் கூறிவந்தனர். தமிழ்தான் பாடமொழி என்றதும் புத்தகங்கள் குவிந்தன. தரமும் கெட்டுப்போகவில்லை. முன்பினும் இப்பொழுதுதான் உயர்நிலைக் கல்விக்கூடத்தில் பயின்று வெளிவரும் மாணவர்கள் சிறந்து விளங்குகின்றனர். ஆதலின் தமிழக அரசைத் தலைசாய்த்து வணங்கி வேண்டுகின்றோம். "உடனே தமிழைப் பாடமொழியாக்குக" என்று.

தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் இதனை வற்புறுத்தல் வேண்டும். காங்கிரசுக்கட்சிகூட இதில் ஈடுபடுவது மிகவும் பொருத்தமாகும். காந்தியடிகள் போற்றிய நெறிதான் அவரவர் மொழிவழியாகப் பாடங்கற்க வேண்டும் என்பது. காந்தியடிகள் வழிநிற்கும் காங்கிரசுக் கட்சியினர் தமிழ்ப் பாடமொழியை வற்புறுத்துதல் தவறாகாது.

"வேற்று நாட்டார் ஆட்சியினால் உண்டான பல தீமைகளுள் மிகக்கொடியது இந்திய இளைஞர்கள் மீது, அழிவைக் கொடுக்கும் அயல்மொழியைப் பாடமொழியாகச் சுமத்தியதே என வரலாறு கூறும். அது நாட்டின் ஆற்றலை உறிஞ்சிவிட்டது. மாணவர்களின் வாணாளைக் குறைத்துவிட்டது. அவர்களை நாட்டு மக்களினின்றும் வேறுபடுத்தித் தனிமைப்படுத்திவிட்டது. அதனால் கல்வி வீணான செலவு மிகுந்த ஒன்றாகிவிட்டது. இது தொடர்ந்து நீடிக்குமேயானால் நமது நாட்டின் ஆன்மாவையே கொள்ளை கொண்டு போய்விடும். அயல் பாடமொழியின் மயக்கத்திலிருந்து கல்வி கற்ற இந்தியர்கள் எவ்வளவு விரைவில் விடுபடுகின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கட்கும் மக்கட்கும் நல்லதாகும்" (Young India 5—7—1929).

காந்தியடிகளின் வழியில்செல்லுகின்றோம் என்று கூறும் காங்கிரசுக்கட்சி நாட்டை ஆளுகின்ற இந்நாளில் அடிகளின் வழிநின்று தமிழைப் பாடமொழியாக்கவேண்டாமா?

காந்தியடிகள் வற்புறுத்தியகொள்கையை, ஆட்சியாளர் ஏற்றுக்கொண்ட கொள்கையை மக்களிடையே பரப்பத் திட்டமிட்ட நம்மை இந்தியக் காவல் சட்டத்தின்கீழ்ச் சிறைப்படுத்தியுள்ளது நம் அரசு. இக்கொள்கையை உளமார ஏற்றுக்கொண்டவரைப் புரவலராகவும் தலைவராகவும் கொண்டுள்ள கல்லூரி நிறுவனம் நம்மைக்கல்லூரியிலிருந்து நீக்கியுள்ளது. தமிழ் உரிமைக்காக-நாட்டு மக்களின் நன்மைக்காக யாம் படும் துன்பங்களை இன்பங்களாகவே கருதுகின்றோம். தமிழைப் பாடமொழியாக ஆக்கும் கொள்கையை மக்களிடையே பரப்ப முற்பட்ட நமக்கு ஏற்படும் இன்னல்களைத் தாங்குவதைவிடப் பெரும் பேறுண்டோ?

மாணவமணிகளே! மீண்டும் வேண்டுகின்றோம். தமிழ்ப் பாடமொழி வகுப்புகட்கே செல்லுங்கள். தமிழ்வழியாகவே கற்பிக்க வேண்டுமென்று ஆசிரியர்களை வேண்டுங்கள். எளிதிற்புரியும் இனிய தமிழ்மொழி வழியாகக் கற்று அறிவைப் பெருக்குவதை விடுத்து விளங்காத வேற்றுமொழிவழியாக நெட்டுருப் போட்டு ஒப்புவிப்பது கனியிருக்கக் காய் கவர்ந்ததை ஒக்கும் பேதைமையாமன்றோ? ஆகவே தமிழ்வழியாகப் பயின்று தலைமை மக்களாய் உலகப் புகழ்பெற முந்துங்கள்.

## என்ன செய்யப்போகின்றீர்கள்?

இந்தியக் காப்புச் சட்டத்தின்கீழ் (D. I. R) சிறைப்படுத்தப்பட்டுள்ளமைக்காகவும், பேராசிரியர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளமைக்காகவும் வருந்தி ஆறுதல் உரைகள் மொழிந்து அன்புக்கடிதம் தீட்டியுள்ள நண்பர்கள் இனி என்ன செய்யப்போகின்றீர்கள் எனவும் வினவியுள்ளனர். ஆறுதல் உரைகட்கு அன்பார்ந்த நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

இனி என்ன செய்யப்போகின்றோம் என்பதனைச் சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்னரே அறிவிக்க இயலும் என்பதனைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றோம். யாம் இன்னும் விடுதலை பெறவில்லை. சிறையிலிருந்து விடுமுறை பெற்றுத்தான் வந்துள்ளோம்; விடுதலையன்று. விடுதலை பெற்று விட்டோம் என்று சிலர் பாராட்டுக்கூடத் தெரிவித்துள்ளனர்.

'பரோல்' நீட்டிப்புக் கிடைக்கவில்லையானால் 19-7-65ல் வேலூர்ச் சிறைக்கு மீண்டும் செல்லவேண்டும். இன்தமிழ் நலம் காக்கப் புறப்படத் திட்டமிட்ட நமக்கு எத்துணை நாட்கள் சிறைவாழ்வோ? யாம் அறியோம்; தமிழக அரசே அறியும்.

**துன்பமிகு சிறைக்கோட்டம் தூயதமிழ் காத்தற்கு**
**இன்பமிகு மாளிகையாம் எத்துணைநாள்**
**அடைத்திடினும்.**

# கழகப் பாடமொழியாக்குக

[1—7—85 இதழ்த் தொடர்ச்சி]

# தொல்காப்பிய விளக்கம்

டாக்டர் சி. இலக்குவனார்

## உருபியல்

**184. சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யும்
கெட்ட இறுதி இயல்திரி பின்றே.**

சுட்டுமுதல் வகரம் = சுட்டு எழுத்தினை முதலாகவுடைய வகர ஈற்றுச் சொல், ஐயும் மெய்யும் = ஐகாரமும் அஃது ஏறியுள்ள மெய்யும் [வை], கெட்ட இறுதி இயல் = கெட்டுவற்றுப் பெற்று முடிந்த சுட்டுமுதல் ஐகார ஈற்றுத்தன்மையில், திரிபின்று = திரிதல் இல்லை — வற்றுப் பெற்று முடியும்.

காட்டு: அவ் + ஐ > அவ் + வற்று + ஐ = அவற்றை.

**185. ஏனைவகரம் இன்னொடு சிவணும்.**

ஏனைவகரம் = மற்றைய வகர ஈற்றுச் சொல் (தெவ்) இன்னொடு சிவணும் = இன் சாரியையுடன் பொருந்தும்.

காட்டு: தெவ் + ஐ = தெவ்வினை.

**186. மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை.**

மஃகான் புள்ளிமுன் = மகரத்தை இறுதியிலேயுடைய சொல்லின் முன்னர், அத்தே சாரியை = அத்துதான் சாரியையாகவரும்.

காட்டு: மரம் + ஐ = மரத்தை.

**187. இன் இடை வருஉம் மொழியுமாருளவே**

இன் இடை வருஉம் = அத்தேயன்றி இன்னும் இடையே சாரியையாக வருகின்ற, மொழியும் உள = சொற்களும் உள.

காட்டு: உரும் + ஐ = உருமினை.

**189. நும் என் இறுதி இயற்கையாகும்.**

'நும்' என் இறுதி = 'நும்' என்னும் மகர ஈற்றுச் சொல்லின் இறுதி, இயற்கையாகும் = அத்தும், இன்னும் பெறாமல் இயல்பாய் வரும்.

காட்டு: நும் + ஐ = நும்மை.

**189. தாம் நாம் என்னும் மகர இறுதியும்
யாம் என் இறுதியும் அதனோரன்ன
'ஆ', 'எ' யாகும் யாம் என் இறுதி
ஆவயின் யகாமெய் கெடுதல் வேண்டும்
ஏனை இரண்டும் நெடுமுதல் குறுகும்.**

தாம் நாம் என்னும் = தாம், நாம் என்று சொல்லப்படும், மகர இறுதியும் = மகர ஈற்றுச் சொல்லும், யாம் என் இறுதியும் = 'யாம்' என்று சொல்லப்படும் மகர ஈற்றுச்சொல்லும் அதனோரன்ன = மேற்கூறப்பட்ட 'நும்' என்னும் மகர ஈற்றுச் சொல்போன்று அத்தும் இன்னும் பெறாமல் முடியும் இயல்பின. யாம் என் இறுதி = 'யாம்' என்னும் மகர ஈற்றுச் சொல்லின், ஆ எ யாகும் = ஆகாரம் எகரமாகும்; ஆவயின் = அவ்விடத்து, யகரமெய் கெடுதல் வேண்டும். = யகரமெய் மறைந்துவிடும்; ஏனை இரண்டும் = மற்றைய தாம், நாம் என்னும் இரண்டு சொற்களும், நெடுமுதல் = முதலிலுள்ள நெட்டெழுத்துக்கள், குறுகும் = குறுகிநிற்கும்.

காட்டு: தாம் + ஐ = தம்மை
நாம் + ஐ = நம்மை
யாம் + ஐ = எம்மை

**190. எல்லாம் என்னும் இறுதி முன்னர்
வற்று என் சாரியை முற்றத் தோன்றும்
உம்மை நிலையும் இறுதியான.**

எல்லாம் என்னும் இறுதி முன்னர் = 'எல்லாம்' எனப்படும் மகர ஈற்றுச்சொல்லின் முன்பு, வற்று என் சாரியை = 'வற்று' என்னும் சாரியை, முற்றத்தோன்றும் = முடியத் தோன்றும்; இறுதியான = கடைசியில், உம்மை நிலையும் = 'உம்' என்னும் சாரியை நிலைபெறும்.

காட்டு: எல்லாம் + ஐ = எல்லாவற்றையும்.

**191. உயர்திணையாயின் நம் இடை வருமே.**

உயர்திணையாயின் = 'எல்லாம்' என்னும் சொல் உயர்திணைப்பெயராக வருமானால், நம் இடை வரும் = 'நம்' என்னும் சாரியை இடையில் வரும்.

-டு: எல்லாம்+ஐ=எல்லா நம்மையும்.

192. எல்லாரும் என்னும் படர்க்கை இறுதியும்
எல்லீரும் என்னும் முன்னிலை இறுதியும்
ஒற்றும் உகரமும் கெடுமென மொழிப
நிற்றல் வேண்டும் ரகரப்புள்ளி
உம்மை நிலையும் இறுதியான
தம் இடை வருஉம் படர்க்கை மேன
நும் இடை வருஉம் முன்னிலை மொழிக்கே.

எல்லாரும் என்னும் படர்க்கை இறுதியும்=எல்லாரும் என்று சொல்லப்படும் படர்க்கை இடத்தில் வரும் மகர ஈற்றுச் சொல்லும், எல்லீரும் என்னும் முன்னிலை இறுதியும்=எல்லீரும் என்று சொல்லப்படும் முன்னிலை இடத்தில் வரும் மகர ஈற்றுச்சொல்லும், ஒற்றும் உகரமும் கெடுமெனமொழிப=மகரமெய்யும் உகர உயிரும் கெட்டு நிற்கும் என்று சொல்லுவர்; நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி=ரகரமெய் கெடாது நிற்கும்; உம்மை நிலையும் இறுதியான=இறுதிக்கண் 'உம்' நிலை பெற்று நிற்கும்; தம் இடை வருஉம் படர்க்கை மேன=படர்க்கை இடத்தில் 'தம்' என்னும் சாரியை நடுவில் வரும்; நும் இடை வருஉம் முன்னிலை மொழிக்கே=முன்னிலை இடத்துச் சொல்லில் 'நும்' என்னும் சாரியை நடுவில் வரும்.

காட்டு: எல்லாரும்+ஐ=எல்லார் தம்மையும்
எல்லீரும்+ஐ=எல்லீர் நும்மையும்.

193. தான் யான் என்னும் ஆயீரிறுதியும்
மேன்முப் பெயரொடும் வேறுபாடிலவே

தான், யான் என்னும்=தான், யான் என்று சொல்லப்படும், ஆயீரிறுதியும்=அவ்விரண்டு னகர ஈற்றுச் சொற்களும், மேன்முப் பெயரொடும்=மேற்கூறப்பட்ட மகர ஈற்று மூன்று பெயர்களோடு, வேறுபாடு இலவே=வேறுபாடு பெற்றில; 'தான்' என்பது நெடு முதல் குறுகித் 'தன்' எனவும் 'யான்' என்பது யகர மெய் கெட்டு, ஆகாரம் எகரமாகி 'என்' எனவும் நிற்கும்.

காட்டு: தான்+ஐ=தன்னை
யான்+ஐ=என்னை.

194. அழனே புழனே ஆயிருமொழிக்கும்
அத்தும் இன்னும் உறழத்தோன்றல்
ஒத்தது என்ப உணருமோரே.

அழனே புழனே=அழன் புழன் எனப்படும், ஆயிருமொழிக்கும்=அவ்விரண்டு சொற்களும், அத்தும் இன்னும்=அத்து, இன் எனும் இரண்டு சாரியைகளும், உறழத்தோன்றல்=மாறி மாறித் தோன்றுதல், ஒத்தது என்ப உணருமோர்=பொருந்தியது என்று கூறுவர் அறிஞர்.

காட்டு: அழன்+ஐ=அழத்தை, அழனினை
புழன்+ஐ=புழத்தை, புழனினை.

அழன்=பிணம்

195. அன் என் சாரியை ஏழன் இறுதி
முன்னர்த் தோன்றும் இயற்கைத்து என்ப.

அன் என் சாரியை='அன்' என்னும் சாரியை, ஏழன் இறுதி முன்னர்=ஏழு என்னும் சொல்லிறுதி முன்பு, தோன்றும் இயற்கைத்து என்ப—தோன்றும் இயல்பினையுடையது என்று சொல்லுவர் அறிஞர்.

காட்டு: ஏழு+ஐ—ஏழனை.

## மறைமலை அடிகள் பிள்ளைத்தமிழ்

— கவிமுரசு அரங்கசாமி

ஆங்கிலமும் பிறமொழியும் வளராமுன்பு
அத்துணைபேர் இவ்வுலகில் தமிழைப்பேசி
அகமகிழ்வோ டினிதிருந்தே யரசராகி
ஆட்சிதனை ஆண்டிருந்த தறிகிலீரோ
பாங்குடனே தமிழினந்தான் பலவாய்த்தங்கிப்
பலநாளாய்ப் பழமையுறப் பரவிநின்று
பலதமிழாய்ப் பன்மொழியாய்ப் பழகுமாற்றல்
பலவொலியாய்ப் பல்வெழிலாய்ப் பன்மாற்றத்தால்
தேங்கியதாய்ப் பலவடிவாய்த் தேயவேடம்
தேர்ந்திடினும் பழந்தமிழ்தான் தோய்ந்துநிற்கும்
தீங்கதனு டொன்றுமிலைத் தென்னகத்துச்
செந்தமிழைத் திக்கெட்டும் பேசக்காண்போம்
தூங்கியது போதுமிதோ ஒளிதோன்றிற்று
தூய்தமிழா விழியென்று பறை கொட்டாயே
தோன்றவெனும் மறைமலையே ஒளிதோன்றிற்று
தூய்தமிழா விழியென்று பறை கொட்டாயே.

[சிறுபறைப்பருவம், செய்யுள் 84.]

# இலக்கியக் காதலும் இன்றைய காதலும்

சிவக்கண்ணன்

காதல்............ காதல் உணர்வு மன்பதை தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை மனித உள்ளத்தினின்றும் பிரிக்கமுடியாத உயர்ந்த மெல்லிய உணர்ச்சியாக இருந்து வருகிறது. இந்நுண்ணிய உணர்வு பற்றித் தொன்று தொட்டு இன்றுவரை பன்னூட்டுப் புலவரும் பலவாறு பாடியுள்ளனர். இருந்தும் தம் சொல்லுக்கு முடிவு கண்டனரே ஒழிய அவ்வுணர்விற்கு முடிவு காண்கிலர்.

உணர்விலெல்லாம், சிறந்து நிற்பது அக உணர்வு...... அதுவே மலரினும் மெல்லிய காதலுணர்வு. காதலின் இலக்கியமாகக்கொண்டு சிறந்து விளங்கும் நாடே, உயர்ந்த நாகரீகம் கொண்ட நாடென்றும். பண்பு மிக்க நாடென்றும் அறிஞர் கூறுப. அத்துறையில், அகத்திணையிலக்கியம் கண்ட தமிழகம் போல், தமிழ்ப்புலவர் போல் வேறெந்த நாட்டவரும் எப்புலவரும் கண்டதில்லையென உறுதியாகக் குன்றின் மேல் நின்று கூவினும் மறுப்பதற்கு எவரும் வாரார்.

காதல் நாட்டுக்கு நாடு, இனத்திற்கு இனம் முறைகளால் வேறுபட்டபோதும் அடிப்படையில் வேறுபாடில்லாதது. அதுபோல் காலத்திற்கு காலம் வேறுபடுதலும் கூடாது. இங்ஙனம் வேறுபடுதலைக் கண் கூடாகக்காண்கிறோம். முன்னவர் காதலை நாம் இலக்கிய வாயிலாகக் கண்டு உணர்கிறோம். இவ்விலக்கியக் காதலுக்கும், இன்றைய காதலுக்கும் உள்ள வேறுபாட்டைக்காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**காதல்...... இலக்கியத்தில்:**

பண்டைத்தமிழர் இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்தினர். எனவே அவர்தம் காதல் வாழ்வும் இயற்கைச் சூழலிலேயே செழுமையுடன் வளர்ச்சியுற்றது. அவர்கள் வாழ்வு தன்னிச்சை வாழ்வாகத் திகழ்ந்தது. தம் வாழ்க்கைத் துணையைத் தாமே தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்று விளங்கினர். உரிமை கிட்டாத போது தாமே எடுத்துக்கொண்டனர்.

வேட்டையாடலின் பொருட்டுக் காட்டு வழிச்சென்ற தலைவன், திணைப்புனங்காத்து நின்ற தலைவியைக்கண்டான். அவள் தன் அழகு, அவனது விடம் தீட்டப்பட்ட அம்பு போல் அவனைத்துளைத்துத் துன்புறுத்தியது. அவன் அது வரை பெண்களையே காணுது வளர்ந்தவனல்ல; இருப்பினும் யாரிடமுமில்லாத, அவளிடமிருந்த ஒரு சிறப்பு அவனைக் கவர்ந்தது. கண்கள் நான்கும் கவிதை சொல்லின; கருத்துக்களைப் புரிந்துகொண்டனர். நெஞ்சங்கள் இடமாறிப்புகுந்தன.

இதுதான் காதல் நாடகத்தின் தொடக்க நிலை. இனியிதன் அடிப்படையைக் காண்போம். தலைவன் அதுவரை பெண்பாலரையே கண்டிராதவனல்ல என்று முன்பேகண்டோம். ஏனெனில் அவன் ஆண் மகனுதலின் வெளியே சென்று பல இடங்களையும், காணும் உரிமைப் பெற்றவன். தலைவி தலைவன்போல் பல இடங்களுக்கும் செல்லும் தன்மையள் அல்லள் எனினும், அவள் பிற ஆடவரை அது வரை காணப்பெருதவள் எனக் கொள்ளுதற்கில்லை. இருப்பினும் ஒருவரை ஒருவர் கண்ட போழ்தலேயே, ஒருவர் உள்ளம் கவர மற்றவருக்கு உரிமை கொடுத்தார் எனில், தாம் இதுவரை காணுத ஒரு கவர்ச்சியை, சிறப்பினை இருவரும் முறையே மற்றவருள் கண்டனர் என்பது பெற்றும். இதனை திருக்கோவையாருரையில், 'திரு' எனும் சொல்லுக்கு உரை கூறுங்கால், "திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கமென்றது அழகு. இஃது என் சொல்லிய வாறேவெனின் யாவனொருவன் யாதொரு பொருளைக் கண்டானே அக்கண்டவற்கு அப்பொருள்மேற் சென்ற விருப்பத்தோடு கூடிய அழகு. அதன் மேல் அவர்க்கு விருப்பஞ்சேறல் அதனிற் சிறந்த உருவும், நலனும், ஒளியும் எவ்வகையானும் பிறிதொன்றிற் கின்மையால்........." எனப் பேராசிரியர் குறிக்கின்றுர். இதனையே தலைவன், தலைவியின் பிணைப்பிற்குக் காரணமெனக் கொள்ளலாம்.

இனி இத்தலைவன் தலைவியின் கூட்டத்திற்கு இலக்கணம் கூறுவர் தொல்காப்பியர்.

"... ...... ... ...... ...... ...... ......
ஒத்தகிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினும் கடிவரை இன்றே"

என, தம் தன்மைகளால் ஒத்த இருவரது கூட்டத்தையே குறிப்பிடுகின்றார். அவருள் தலைவன் அத்தன்மைகளால் மிக்கு விளங்கினும் குற்றமில்லை என்பதாம். இனி, 'ஒத்த' என்பது எவை எவை எனக் காண்போம்.

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவுநிறுத்தக் காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு
திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

என பிறப்பு, ஒழுக்கம், ஆண்மை, ஆண்டு அழகு அன்பு, நிறை, அருள், அறிவு, செல்வம் ஆகிய பத்து வகை ஒப்புமை வேண்டும் என்பதாம். இவ்வாறு ஒத்த தன்மை வேண்டுமென வற்புறுத்தலின் மறைபொருள் யாதெனின், தன்னிலையில் குறைந்தோரிடம் கொள்ளும் காதல் நாளடைவில் மாறுபடக் கூடும் என்ற கருத்தாலேயாம். தன்மை மாறுபட்ட இருவர் நெடுநாள் நட்பொடு வாழ்தல் இயலாதென்பதை நாம் நடைமுறை வாழ்க்கையிலேயே கண்டு வருகிறோம்.

இவ்வாறு வலுவான அடித்தளத்தின்மேல் எழுப்பப்படும் களவு வாழ்வு பின்னர் கற்பாக (இல்லற வாழ்வாக) சிறத்தல் இயல்பு.

காதல்......... இன்று!

நாகரிகம் வளர்ந்த இக்காலில், அறிவியல் வளர்ச்சியும், கல்வி முறையும், பெண்ணுரிமையும் காதல் வாழ்விற்குச் சூழல் அமைத்துத் தந்துள்ளன. இருபதாம் நூற்றாண்டுக்குரிய நம் தலைவன், பேருந்து நிலையத்தில், நாளும் தலைவியைச் சந்திக்கிறான். அண்ணலும் நோக்க, அவளும் நோக்குகிறாள். பார்வை, புன்முறுவலாக மாறி, முறுவல் பேச்சாக மலர்ந்து, பேச்சு நட்பாக வளர்ந்து, நட்பு காதலாக உருவப்பெறுகிறது. இருவரும் ஒருவரின் இன்றியமையாமையை மற்றவர் உணருகின்றனர். ஒருவரோடொருவர் பிணைத்துக்கொள்ளத்துடிக்கின்றனர். தலைவனும் நிலையை உணர்ந்து பெற்றோரிடம் சென்று தன் திருமணத்தை முடித்துவைக்குமாறு (தானே பெண் பார்த்து விட்டதால்) கூறுகின்றான். தந்தை வெகுண்டு மறுக்கிறார். தலைவியும் அதுபோல் இக்கட்டுக்கு ஆளாகிறாள். துணைக்கு யாருமின்மையால், நண்பர்கள் உதவியுடன் நன்னாளொன்றில், தலைவியைத் தலைவன் பதிவுத் திருமணம் செய்து கொள்கிறான் இருவரும் ஒன்றாக வாழ்ந்து ஆண்டொன்றைக் கழிக்கின்றனர். ஆண்டு முடிவுக்குப்பின், தலைவன் தனியறை ஒன்றைத் தேடிக்கொள்கிறான். தலைவி பெண்கள் விடுதி ஒன்றில் சேர்ந்து விடுகிறாள். ஒன்றிய உள்ளங்கள் இரண்டாகி விட்டன. (மணமுறிவு) 'மண விடுப்பும்' செய்துகொண்டிருப்பர். முன்னர் தடுத்த பெற்றோரும் உற்றாரும், எள்ளி நகையாடுவரே என்று தம்மைத்தாமே கட்டுப்படுத்திக் கொள்கின்றனர்.

இப்பிரிவிற்குறிய காரணங்கள் ஆராய்வோம்.

தலைவன் தலைவியைக் காண்கிறான்; காதல் கொள்கிறான்; அவளும் அவ்வாறே. மணமுடிக்க விழைகின்றனர். பெற்றோரும், மற்றவரும் தடுத்தபோதும் துணிந்து செயலாற்றுகின்றனர். இந்நிலை வரை இலக்கியக் காதலோடு இவர்கள் காதலும் ஒத்துச்செல்கிறது. இதன் பிறகு வேறுபடுகிறது.

முதல் சந்திப்பு இருவரிடையே ஏதோ ஒரு கவர்ச்சியை, பிணைப்பை ஏற்படுத்திவிடுகிறது. இப்பிணைப்பின் பின்னரே தலைவன் தலைவியைப் பற்றி அறியத் தலைப்படுகிறான். தலைவி ஒரு அலுவலகத்தில் எழுத்தர் பணியிலிருக்கிறாள். தலைவன் ஒரு கடையில் விற்பனையாளனாக இருக்கிறான். இருவருமே வெவ்வேறு தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் இருவேறு துறையிலுள்ள இவர்கள் மணம் புரிந்து கொள்வதால், வாழ்வு சிறக்க நடக்குமா என்று சிந்திக்கவே இருவருக்கும் நேரம் கிடைப்பதில்லை. இலக்கியத்தில் களவுக் காலம் நீட்டித்ததாயிருப்பதால், தலைவன் தலைவி ஒருவர் மற்றவரை புரிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டுகிறது.

இலக்கியக்காதலர்க்குக் கூறப்பட்ட ஒத்த குணங்கள் பத்தும் இல்லாவிடினும், ஓரிரண்டாவது ஒத்து வருகிறதா எனில் இல்லை என்பதே விடையாம். அவள் படித்தவள்... எழுத்தராகப் பணியாற்றுகிறாள். அவன் படிப்பில் குறைந்தவன். அதற்கேற்றாற்போல் கடையில் விற்பனையாளனாகப் பணிபுரிகிறான். எனவே அறிவில் இருவருக்கும் வேறுபாடு உண்டு என்பது தெளிவு. செல்வ நிலையைநோக்கில் அதிலும் வேறுபாடே. குலம் பற்றிச் சிந்திக்க வேண்டுவதில்லை. ஆண்டு ஒப்புமை காண்பதற்கு முன், அவர்கள் காதல் முந்திக்கொள்கிறது. எனவே இவர்கள் கூட்டு, உணர்ச்சியின் வேகத்திலேயே அமைந்ததேயன்றி, அறிவின் அடிப்படையில் அமைந்ததாகத் தோன்றவில்லை.

(தொடர்ச்சி 23-ஆம் பக்கம்)

# வள்ளுவர் ஆண்டும் கிருத்துவின் ஆண்டும்

வீ. பகா. சுந்தரம், எம். ஏ.,

என் மகன் திருமண அழைப்பிதழில் கி.பி. 1965 ஆண்டோடு, வள்ளுவராண்டு 1996 என்று குறித்திருந்தேன். இதைக்கண்டு, மனத்தில் கோபங்கொண்டு, வள்ளுவராண்டைக் கிருத்தவர்கள் வழங்குதல் அறவே கூடாது என்று கண்டித்துப் பசுமலை முதுபுலவர் ஒருவர் பல தடைகள் கூறி எழுதியுள்ளார். அவர் ஆய்ந்து கூறிய அறிவுரைத் தடைகள் பொருந்துவனவா எனக் காண்போம். அவருடைய கருத்துக்களை முதற்கண் அறிந்து கொள்வோம்.

1. கிருத்து பெருமானுக்கு முன் வள்ளுவரைக் காட்ட வேண்டும் என்ற நோக்கங்கொண்ட **சைவ சமய வல்லுநர்** சிலர் **ஆராய்ச்சி என்ற பெயரில்** வள்ளுவராண்டு என ஒன்றை இருபதாம் நூற்றாண்டின் மத்தியப் பகுதியில் புகுத்தியுள்ளனர். ஆகையால் வள்ளுவராண்டைப் பயன்படுத்தவே கூடாது.

2. 19, நூற்றாண்டிற்கு முன் வாழ்ந்த அனைவரும் வள்ளுவர் கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்றே கொண்டனர். ஆகையால் வள்ளுவராண்டைப் புதிதாய் சைவர்கள் கணித்தது பொருந்தாதது.

3. பதினெண் கீழ்க் கணக்கு நூற்களின் வரிசையிலே திருக்குறள் இடம் பெற்றுள்ளது. இந்நூற்கள் கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்குப்பின் எழுதப் பெற்றுத் தொகுக்கப் பெற்றவை. எனவே குறள் காலத்தால் பிந்தியது.

4. கி. பி. ஆண்டு முறை உலக முழுமையும் ஏற்கப்பட்டுளது. தமிழகத்தில் ஒரு சமயத்தவரிடை எழுந்துள்ள வள்ளுவராண்டு இந்திய நாடு முழுமையாவது ஏற்கப்பெறுமா?

5. கிருத்துவ மக்கள் உலக உறவில் நம்பிக்கை கொண்டவர்கள். மொழியோ நாடோ அவர்களது உலக உறவைக் குலைத்துவிட இடங்கொடுக்கலாகாது.

இவையே பசுமலை முதுபுலவரின் புது அறிவுரைகள். இனி இவற்றின் பொருத்தத்தைக் காண்போம்.

1. **பண்டையர் கூற்று:** பண்டைத் தமிழ் நாடு, இலக்கிய நூற்களின் திட்டமான காலம் பற்றித் தெளிவான ஆராய்ச்சி முறைகளில் ஈடுபடாத இருண்ட பழங்காலத்தில் வள்ளுவரது காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்று கூறி வந்தது உண்மையே. ஆனால் பிற்காலத்தில் நுண்மாண் நுழைபுலம் படைத்த நடுநிலைச் சான்றோர் பற்பலர் வள்ளுவர் காலத்தைத் தெள்ளிதின் நிலைநாட்டத், தொடர்ந்து ஆராய்ந்தனர். பல கோணங்களினின்றும் ஆராய்ந்த அறிஞர் பலரும். ஒரு எல்லையாக வள்ளுவர் கி. மு. முதல் நூற்றாண்டின் பிற்பகுதிக்குப் பிற்பட்டவரல்லர் என்ற முடிவை ஆதரித்தனர். பசுமலைப் புலவர், வள்ளுவர் காலம்பற்றி இது காறும் ஆய்ந்த ஆராய்ச்சிகள் அனைத்தையும் அறிந்து தக்க காரணங் காட்டி மறுத்திருத்தல் வேண்டும். அவ்வாறு மறுக்காமலே, ஆராய்ச்சியற்ற ஆழ்ந்திருண்ட, ஆதாம் கால, அற்பச் செய்தியை இன்றும் கூறித்திரிவதை அறிஞர் ஏற்பாரோ? பூமி தட்டையானது என்று பண்டையோர் பன்னெடுங்காலம் கூறி வந்த ஒரு காரணத்தாலே, அது உண்மையாகி விடுமா?

2. சைவசமயப் பற்றுக் கொண்ட வல்லுநர்கள் கிருத்து பிரானுக்கு முன்னர்த் திருவள்ளுவரைக் காட்டல் வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்கள் என்று புலவர் கூசாது குற்றஞ் சுமத்துகின்றார்.

வள்ளுவர் காலத்தை ஆய்ந்தவர் அனைவரும் சைவசமயக் குறுகிய நோக்கினரா!

...ளுவர் காலம் ஆய்ந்தவருள் மு. ராகவையங்காரும் நாராயண ஐயங்காரும் சைவர்களா?— சி. இலக்குவனாரும், நாவலர் ச. சோ. பாரதியாரும் சைவத் திருப்பற்றுப் பூண்டு திகழ்ந்துதான் வள்ளுவரை ஆராய்ந்தார்களா? அன்றியும் சைவப் பெரியார் வையாபுரிப்பிள்ளையவர்கள் வள்ளுவர் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டென்றது, அவரது சைவப்பற்று அற்ற தன்மையினையா காட்டுவது? இல்லை இவர்கள் அனைவரும் உண்மையை அறிய, ஆராய்ச்சி நெறி முறையில் சென்ற நீதியாளர்களே. வையாபுரிப்பிள்ளை சங்க இலக்கியங்களில் காணப்படாது குறளில் மட்டும் காணப்படும் சொற்களையும் சொற்றொடர்களையும் வட சொற்களையும் எடுத்துக்காட்டி, குறள் காலத்தால் பிந்தியது என்றார். வையாபுரியின் காலம் சொற்பிறப் பாராய்ச்சி, தொடக்கநிலையாக அரும்பிய காலம்; பல தமிழ்ச் சொற்களின் வேர் சொல் அறிவு விளக்க முறாத தொடக்க நிலையில் தூயத்தமிழ்ச் சொற்களையும் வடசொற்கள் என வாதித்தார். வையாபுரியார் காட்டிய **சான்றுகள் அனைத்தையும்** பசுமலை நாவலர் ச சோமசுந்தரபாரதியார் தக்க காரணங்கள் காட்டி மறுத்துத் தள்ளினார். (செந்தமிழ் 45-ஆம் தொகுதி) 'திருவள்ளுவர்' என்ற தம் நூலில், வையாபுரியார் காட்டாத **வரலாற்றுச் சான்றுகளை** நாவலர் பாரதியார் ஏராளமாய்க் காட்டினார். நற்றிணை. குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, பரிபாடல் பத்துப்பாட்டுள் சில நூற்கள்—இவற்றில் பரந்து காணப்படும் குறள்வரிகளைக்காட்டி, இச்சங்க நூற்களுக்குத் திருக்குறள் முந்தியது என நிறுவியுள்ளார். அவர் நிறுவியதை நாவலர் ஊராகிய நற் பசுமலையில் வாழ்ந்தும்கூட நம் முதுபுலவர் அறியாதும். அறிந்தால் மறுக்காதும் பொருந்தாத பிற்பட்ட செய்தியைச் செப்ப முற்பட்டனர். சி. இலக்குவனார் கூறியுள்ளார் – பௌத்தமதம் தமிழ் நாட்டில் பரவிய காலம் – அசோகன் வாழ்ந்த காலமாகிய கி. மு. 3-ஆம் நூற்றாண்டு இக்காலத்தைச் சார்ந்தவர் வள்ளுவர் என்பதற்குப் பல சான்றுகள் காட்டியுள்ளார். நாவலர் பாரதியாரும், சி. இலக்குவனாரும், பேராசிரியர் A. சக்கரவர்த்தியாரும், இராசமாணிக்கனாரும் சைவசமயம் பெருமை நாட்டவா சைவரல்லாத வள்ளுவரை முற்பட்டவர் என்று கூறினார்கள். அன்று! அன்று. அவர்கள் நடுநிலைச் சான்றோர்கள் என்பதை நற்றமிழுலகம் நன்கறியும். இவர்களையும் ஐயுறும் நம் புலவரைத் திருத்துதல் அரிதுள் அரிது.

3. மேலும் வள்ளுவராண்டு முறை இருபதாம் நூற்றாண்டில் தான் தோன்றியது என அதன் பெருமையைக் குறைத்துப் பேசுகிறார் பசுமலைப்புலவர். நேருவும் காந்தியும் நம் காலத்துத் தோன்றிய காரணத்தால் அவர்கள் பெருமை குறைந்து விடுமா?

4. காலத்தால் பிற்பட்ட கீழ்க்கணக்கு நூற்களின் வரிசையில் குறள் உள்ளது என்று பசுமலைப்புலவர் மறுத்துள்ளார். ஐந்து வரிகட்குக் குறைந்த செய்யுட்களின் தொகுப்பே கீழ்க்கணக்கு நூற்கள். இவை தோன்றிய காலத்தை அடிப்படையாக வைத்துத் தொகுக்கப்பட்டவை அல்ல. காலத்தால் தொன்மை நூற்களும் மிகப் பிற்பட்ட நூற்களும் அவ்வரிசையில் உள்ளன என்ற உண்மையை மாணவர்கள் கூட இன்றறிவார்கள்.

5. வள்ளுவராண்டு உலகமுழுமையும் பரவாதது; இந்தியா முழுவதிலுங்கூடப் பரவாதது எனத் தாழ்த்துகின்றார் பசுமலைப்புலவர்.

நான் கேட்கின்றேன்; சித்திரை வைகாசி மாதங்கள் உலக முழுமையும் பரவிய மாதங்களா? தமிழ்மொழி இந்தியா முழுமையும் பரவிய மொழியா? இல்லை. ஆயினும் அவற்றைப் பயன்படுத்துகிறோம். சித்திரை, வைகாசி என்ற மாதங்களையும் மரபு வழியே பயன்படுத்துவதால் உலக ஒற்றுமை உணர்வு அற்றுவிடுகின்றதா? வள்ளுவர் உலக ஒற்றுமையைக் குலைக்கும் கொள்கையினரா? வள்ளுவராண்டைப் பயன்படுத்துவோர் உலக உறவில் நம்பிக்கை யற்றவராகி விடுகின்றனர் என்று பசுமலைப் புலவர் அழுத்தமாகக் கூறுவதை நம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை. வள்ளுவர் உலக உறவு நாட்ட வந்த உத்தமர்களுள் ஒருவர் என்பதை புலவர் அறியுங்காலம் வரும்.

மேலும் ஆண்டு வரிசைக்கணக்கு முறையிலா மதத்தின் பெருமை அடங்கிக் கிடக்கிறது? நிறுத்தலளவை, கால அளவை, முதலிய அளவு முறைகட்கும் மதத்தின் ஆன்மீக அறநிலைக் கொள்கைகட்கும் யாதொரு தொடர்பும் இல்லை. ஆண்டுக் கால முறை வேறு; ஆன்மீகக் கொள்கை முறை வேறு. சனவரி, பிப்ரவரி என்ற கிருத்துவ ஆண்டின் மாதப் பெயர்கள் கிருத்துவப்பெருமானின் ஆன்மீகக் கொள்கைகளையோ அறநிலைக் கொள்கைகளையோ அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை அல்லவே அல்ல. அம்மாதப்பெயர்கள் எல்லாம் ரோமைக் கட்டுக்கதைகள், பொய்ப் புராணப் பெயர்கள் இதிகாசப் புனைவுகள் முதலியவற்றை அடிப்படையாகக்கொண்டு எழுந்த பெயர்களேயாகும். ஆயினும் ஆதிக் கிருத்துவப் பெருமக்கள் பண்டை மரபினைப் பின்பற்றக் கருதி அவற்றை ஏற்றுக்கொண்டனர்.

[தொடர்ச்சி 24-ஆம் பக்கம்]

# தமிழ்மக்களுக்கு ஓர் வேண்டுகோள்

**திருத்துறைக்கிழார்.**

மலர்தலை யுலகில் மாந்தன் தோன்றிய
நிலந்தமிழ் நாடு என்றும்; முதன்மை
மொழியும் தமிழெனமொழிந்தனர் முன்னோர்.
வடமொழி புகுந்து வளத்தை யழித்தது;
ஆங்கிலம் நுழைந்து ஆண்மை குறைத்தது;
இந்தி புகுந்து ஏங்க வைக்கின்றது.
ஆகலான்,
இருமொழிக் கொள்கையோ, மும்மொழிக்
கொள்கையோ,
இருந்தமிழ் வளத்திற்கு இழுக்கே யறிவீர்.
பேராயக் கட்சியார் செய்த முடிவுகள்,
தீராத் தீமை விளைக்கும் பான்மைய.
தமிழ்க்குறும் சிதைவைத் தடுக்கும் தமிழரைத்
தகைக்கும் கொடுமை சாற்றவும் தகுமோ?
தனித்தமிழ் வாழ உழைக்கும் சிலரை
முனிந்து சிறையுள் மூடி வைக்கிறார்
அவ்வகை யோரில் அருந்தமிழ் மகனார்
இலக்குவ னாரொரு இன்றமிழ்க் குரிசில்,
இன்னும் சில்லரை அரசு கணித்து
இரும்புக் கூண்டுள் அடைக்க உளதாம்.
தமிழுக்கு உழைக்கும் தனிப்பெரு மக்கள்
சிறைக்குள் இருப்பின் செய்வது என்னே?
இந்தியக் காப்புச் சட்டமொன் றியற்றி
முந்தியே பிடித்து முடக்கி விடுகிறார்.
தமிழ்ப்பண் டாரகர், தமிழ்ப்பே ராசான்,
தனித்தமிழ்த் தொண்டர் இலக்குவ னாரைச்
சிறைக்கோட் டத்துள் செலுத்திய தன்றி
அலுவலை விட்டு அகற்றியும் விட்டனர்.

தமிழைப் பரப்பத் தமிழுரிமை பெற
பெருநடைப் பயனம் போக முயன்றது
குற்ற மென்றால் கொள்கையாதோ?
அயலார் ஆண்ட போதும் இத்தகை
அடாத செயல்கள் நடந்தன வின்றே?
விடுதலை பெற்ற நாட்டில் மாந்தர்
விடுதலை யுணர்வுடன் வாழ வழியிலை.
அந்தோ! தமிழா, நின்னவலம் என்னே!
இலக்குவ னார்க்கு இழைக்கும் இடர்கள்
பலர்க்கும் வராது பார்த்தல் நன்றாம்.
நமக்கு என்னென இருந்தால் நாளை
நமக்கே இடுக்கண் நாடலும் உண்டே!
எனவே,
தமிழா சிரியரே! தமிழ்ப்பெரு மக்களே!
இலக்குவ னாரை விடுதலை செய்து
அலுவலில் அமர்த்த அரசினர்க் குணர்த்தல்
உங்கள் உரிமைக் கடமையு மாகும்.
தமிழ்மன் றங்கள் தமிழ்மா நாடுகள்
கூட்டித் தீர்மானம் கூறியாங் குணர்த்தி
அரசுக்கு விடுத்து ஆவன செய்ய
கட்சிப் பிரிவு கருத்தில் பிளவு
அனைத்தும் நீக்கி அனைவரும் தமிழரே
என்ற அடிப்படை ஒருமை யுணர்ந்து
ஆவன செய்ய அடிபணிந்து வேண்டுதும்.

## நெஞ்சில் உயர்வாய்!

மு. வில்லவன்.

★

தண்டமிழை நெஞ்சமதில் ஏற்றுத் தனித்தமிழில்
தன்பெயரை நல்கித் தமிழ்த்தொண்டை—நன்முறையில்
செய்த பரிதிமால் என்னும் செழும்புலவா
உயர்வாய்எம் நெஞ்சில் உயர்ந்து.

-ஆம் பக்கத்தொடர்ச்சி]

# ...றைமலை அடிகளாரின் கொள்கையும்............

என்று உரங்கொண்டவராய்த் திறங்கொண்டவராய்த் தமிழ்ப் பகைவர்களைப் பொருட்படுத்தாது எதிர்த்து நின்றார். எதிர்ப்பைக்கண்டு வளைந்து கொடுப்பவர் கொள்கையைக் கைவிடுவர். எதிர்ப்போரோ கொள்கையை நிறுவும் உரவோராய் உலகம் புகழ வாகை சூடுவர். வரலாறு கண்ட உண்மையிஃதன்றோ? அடிகள் தம் கொள்கைகளைச் செயற்படுத்தும் முறையில் தனித்தமிழில் வீட்டிலும், மேடையிலும் பேசியதும், நூல்கள் எழுதியும் யாவருமறிவர். தமிழ் நெறி (சிவநெறித்துறையிலும் தமிழையே கையாண்டனர். வடமொழிகலவாது, தூய தேவார-திருவாசகங்கொண்டு வழிபாடாற்றினர். திருமணச் சடங்குகளைத் தமிழில் செய்து காட்டினர். தாம் தம் மாளிகையிலமைத்த அம்பலவாணர் கோயிலின் குடமுழுக்கு (கும்பாபிடேகம்) விழாவினையும் தமிழிலேயே செய்தார். தமிழ் மக்களுக்கு ஒரு சிலர் தவிரப்பெரும்பாலார்க்கு ஆங்கில மொழி, ஆரிய மொழிப் பயிற்சிகள் கூடா என்றெழுதினர். தமிழினத்தார் நலமுறத் தமிழ் மொழிக் கல்லூரிகளை நாட்டுதலும், அதனைப் பிழையறக் கற்றலும் வேண்டும் என்றும், அறிவியல் உட்பட அனைத்துத் துறைகளிலும் தமிழ் மொழியே பயிற்சிமொழியாதல் வேண்டும் என்றெழுதியுள்ளார். அடிகளோ ஆங்கில மொழியில் மாபெரும் புலமை பெற்றவர்கள். அம்மொழியில் மூன்று அரிய நூல்களும் எழுதியுள்ளார்கள். ஆரியமொழியிலுள்ள சாகுந்தலத்தை மொழி பெயர்த்தவர்கள். அம்மொழிபெயர்ப்பின் சிறப்பைப் பாராட்டிக் காஞ்சி காமகோடி சங்கராச்சாரிய அடிகள் அந்நூலைப் பயின்று கட்டுரை எழுதுவார்க்குப் பரிசுக்காக 5000 மூலநிதியளித்துள்ளார். இவ்வாறு அவ்விரு மொழிகளிலும் ஆழ்ந்த புலமையுடையவராயினும் அடிகள் நம் தாய் மொழியின் உரிமைக்காகவே தலைக்கட்டிக்கொண்டார்கள். இன்றோ ஆங்கில-ஆரியத்தில் இரண்டொரு பட்டங்கள் பெற்று அவற்றிற்கே தம்மை முற்றும் விற்றுத் தமிழ்த்தாயின் உரிமைகளைச் சிதைக்கின்றார்கள். பிறர் மட்டுமல்லர். தமிழ்ப்புலவர்கள் பலர் கூட.

ஒரு சிறு செய்தி: அடிகள் தம் மக்கள் திருமண அழைப்பிதழ்களை எல்லாம் ஆங்கிலத்திலன்றித் தூய தமிழிலேயே அச்சிட்டு வழங்கினர். தாம்நடத்திய பேரவை நிகழ்ச்சிகளில் ஒரு எழுத்துக்கூட-சொல்கூட ஆங்கிலத்திலமையுமாறு எழுதியதில்லை; பேசியதில்லை. இன்றைய தமிழ்ப் புலவர்கள் பலரோ இந்நிலையை எதிர்க்கும் மாவீரர்கள் தாம்! ஆனால் ஆங்கிலத்தின் புகழ்பாடிகளாக உள்ளனர். தம் பேச்சிலும், செயலிலும் ஆங்கிலத்தைப் போற்றுகின்றனர். அடிகளின் தமிழ் உரிமைக்கான செயல்களைப் புலவர்களாவது பின்பற்றட்டுமே.

இங்ஙனம் அடிகள் தமிழ், தமிழின-தெய்வ நெறிக் கொள்கைகளில் ஈடுபட்டு அயராது அஞ்சாது 60 ஆண்டுகட்குமேல் உழைத்தனர். அதனால், அவர்கள், அரசாங்கப் பட்டயங்களையோ—பாராட்டுக்களையோ பெறவில்லை. பெற விரும்பியதுமில்லை. இன்னொருவாய்ப்பு யாதெனின் பல்கலைக் கழகங்கள் எவற்றிலும் அவற்றின் தனிக்குழுக்கள் ஒன்றிலும் உறுப்பினராக இருந்ததில்லை. இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படவுமில்லை. ஒரு பொன்னாடையும் போர்க்கப்பட்டவருமல்லர். தம் நூல்களுக்காக ஒரு பரிசும் பெற்றவருமல்லர். தருவார்களா தமிழுரிமைப் போராட்டத்தலைவருக்கு? அதுவும் அக்காலத்தில் தமிழ்-தமிழ் என மேடையில் முழங்கும் தலைவர்களாவது அடிகட்குச் சிறப்பும் பாராட்டுமளித்தார்களா? அப்படி அவர்கள் அடிகட்குச் செய்தால் தங்கள் பட்டம், பதவி, செல்வங்களுக்கு 'ஆபத்து' என்றஞ்சி ஒடுங்கியிருந்தனர் 1950-ல் கூட.

இவ்வளவுக்குங் காரணம் அடிகள் தம் கொள்கைகளுக்காக வாழ்ந்து காட்டியமையேயாகும். தம் கொள்கைகளை அடிகள் ஒரு சிறிது தளர்த்தியிருப்பாராயின் பட்டம்,பதவி, பணம் இவைகளால் உயர்ந்திருப்பர். தமிழ் தாழ்ந்தே இருக்கும். கொள்கைகட்காக வாழ்ந்த கோமானாகிய அடிகள் தம் வாழ்வில் பட்டம் பதவி, பாராட்டு, பெருஞ்செல்வங்களை இழந்தாராயினும் '**தனித்தமிழியக்கங்கண்ட தலைவர்**' என்ற பெரும் பட்டயத்தைத் தமிழகம் உள்ளளவும் நாட்டிக்கொண்டாரன்றோ? அதுவே, பெருஞ்செல்வமும், பட்டமும் பதவியுமாம்.

[1—7—65 இதழின் தொடர்ச்சி]

# பொற்பூவை

தமிழ் நாடன்

காட்சி 6

[மதுரை நகர் கொலைக்களமாயிற்று. அன்று பாண்டியன் நெடுஞ்செழியன் பொற் கொல்லன் சொற்கேட்டு அறம் தவறினன். இன்று வேதநாதன் சொற்கேட்டு வேள்வி செய்யப் புறப்பட்டான் வெற்றிவேற் செழியன்.

நகரெங்கும் இழவுக் கோலம், பயங்கர ஓலம். அபயக்குரலும், அலறலும், கதறலும் புலம்பலும் எங்கும் கேட்டது. தொளாயிரத் துத்தொண்ணூற்றொன்பது பொற்கொல்லர் வெட்டப்பட்டனர். குருதி ஆறென ஓடியது. ஆயிரமாக இனி ஒருவனே தேவை. வேத நாதனின் விழிகள் வெட்டக் கொண்டு வந்துள்ள பொற்கொல்லர்களை நோக்கியது. துருவித்துருவி பொன்னனைத் தேடியது. அவனைக் காணாது கண்டு கலங்கியது.

வேதநாதன் மெதுவாக அரசனை அணுகி......]

வேதநாதன்: வேந்தே, ஆயிரமாக இனி ஒருவனே தேவை இறுதியாக பலியிட ஓர் இளம் பொற்கொல்லன் தேவை. தேவிக்கு இளம் குருதி என்றால் கொம்புத்தேன், கருப் பஞ்சாறு. ஆகையால் நானே நகரில் தேடி ஓர் இளம் பொற்கொல்லனை கொண்டுவருகிறேன் விடை கொடுங்கள்.

மன்னர்: போங்கள்! வேள்வி விரைவில் பூர்த்தியாக வேண்டும்.

(போர்வீரர்களோடு புறப்பட்டான் புல்லன். பூவை வீடடைந்தான், அது பூட்டியிருக்கக்கண்டு பொருமினன். சிட்டுக்கள் வலையில் விழாமல் பறந்துவிட்டனவோ எனக் கலங்கினன். நேராக பூம்பொழில் நோக்கிப் போனன். அங்கே சித்தம் கலங்கி பித்துப் பிடித்த நிலையில் பொன்னனிருக்கக் கண்டான் பூரிப்புக்கொண்டான். மமதையுடன் ஆணையிட்டான் வீரர்களுக்கு......)

வேதநாதன்: பிடியுங்கள் அவனை, தேவிக்கேற்ற தீங்கனி இவன்தான். இவனின் இளம் இரத்தத்தைக் குடித்தால் தான், அவளின் கோபம் அடங்கும்.

(பொன்னன் ஓடவில்லை, எதிர்த்து வாதாடவில்லை, பேசாமலிருந்தான், பித்தனயிருந்தான். கொலைக்களம் நோக்கி வீரர் பின்னே நடந்தான்.)

காட்சி 7

[பொன்னனின் கரங்கள் பின்புறம் இழுத்துக்கட்டப்பட்டு, சிரம் பலிபீடம் மேல் வைக்கப்பட்டு விட்டது. கொலைஞன் கொடுவாளை எடுத்திட்டான். மன்னன் வானத்தை நோக்கினன். கருமுகில் கூட்டம் கண்டு, மகிழ்ச்சி கொண்டான் வேதநாதன். சொல் உண்மை என்று எண்ணினன். மன்னன் 'வெட்டு' என்று கூறினவுடன் தலைவேறு, உடல்வேருகப்போகப்போகிருன் பொன்னன். ஆனல் அவன் முகத்தில் கொஞ்சமேனும் வாட்டமிலலை, வருத்தமில்லை, அச்சமில்லை. புன்னகை பூத்த முகத்துடன் தான் இருந்தான்.

நேரம் நெருங்கி விட்டது. வேதநாதன் வேதமோதி முடித்தான். முரசுகள் முழங்கின. தாரைகளும் கொம்புகளும் ஒலித்தன. வேதநாதன் தலையசைத்தான். வேந்தன் வாய் திறந்தான்.]

மன்னர்: வெட்டு.

(கொலைஞன் வாளை உயர்த்திட்டான். அப்பொழுது.)

குரல்: நிறுத்து வெட்டாதே.

(பெருங்குரல் பெண்ணின் குரல் கேட்டது. வெட்டவந்த வாள் நின்றது.)

வேதநாதன்: (சினத்துடன்) யாரது! அபசகுனப்படுத்தியது.

குரல்: நானடா நான்!

(குரல் கண்ணகிச்சிலையிலிருந்து வரக் கண்டு அனைவரும் திடுக்கிட்டனர்.)

வேதநாதன்: கற்புக்கரசியா பேசுவது!

குரல்: உன் நிகண்டுப்படி காளிதேவியடா.

வேதநாதன்: (விழிக்கிருன், நிலைமையைச் சரிசெய்ய] வேந்தே, களபலி கண்டு காளி தேவியே வந்துவிட்டாள், வணங்குங்கள், வரம் கேளுங்கள்.

[தொடரும்]

[17-ஆம் பக்கத் தொடர்ச்சி]

## ...க்கியக் காதலும் இன்றைய காதலும்.......

அடுத்து, தலைவன் தான் தலைவியைச் சந்திக்குமுன்னும், சந்தித்த பின்னும் தான் கற்பனை செய்து வைத்திருந்த அல்லது இவ்வாறு இருக்க வேண்டும் என்று தான் எதிர் பார்த்திருந்த குணங்களனைத்தும் தன் தலைவியிடம் இருக்க வேண்டுமென்று எண்ணுகிறான். அங்ஙனமே அவளும்; இருவருமே ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ளு முன்னரே திருமணத்தில் இறங்கிவிடுகின்றனர். மண வாழ்க்கையில் ஈடுபட்ட பின்னரே, தாங்கள் எண்ணியவாறு செயல்களும், எதிர்பார்த்தவாறு குணங்களும் இருவரிடமே இல்லாதது கண்டு ஏமாற்ற மடைகின்றனர். இல்லாத குணங்களை மறந்து, இருக்கும் குணங்களைப் போற்றி வாழும் தகுதியை இருவருமே பெற்றிருக்கவில்லை.

இவ்வாறு இளமையின் எழுச்சியால் உண்டாகும் காதலுணர்ச்சி வேகத்தில், மயக்கத்தில் காணும் பொருள்கள் மங்கலாய் காணப்பட்டும், அவற்றின் உண்மைத் தன்மையை உணராது, அதன் கவர்ச்சியில் (போலித் தன்மையில்) மயங்கிச் செயலாற்றிவிடுகின்றனர். அடுத்து தலைவன் தலைவியின் நிலையில்லா மனமும்காரணமாக அமைகிறது. தான் தலைவியின்பால் கண்ட சிறப்பு வேறொருவரிடமும் காணாத தன்மையன் தலைவன். அவனினும் இக்குணம் தலைவிக்கே சாலப்பொருந்துவதாகும். ஆனால் இந்நாளில் ஒன்றினும் ஒன்றைச் சிறப்பாகக் கருதும் குணம் இருவரிடமே படிந்துவிட்டதால் ஒருவரைமற்றவரோடு ஒப்பநோக்கி, தலைவனும் தலைவியும் முறையே தாழ்வு நிலை கற்பித்துக்கொள்கின்றனர்.

இறுதியாக இன்றைய காதல் வாழ்வின் தோல்விக்கு தலையாய காரணம் ஒன்று உளது. பண்டைக்காதல் வாழ்வு இயற்கையோடு ஒன்றியது. இளம் நெஞ்சினர் உணர்வோடு ஒன்றிக்கிடந்த காதல் உணர்வு, இயற்கையால் தூண்டப்பெற்றது. 'மலரினும் மெல்லிது காமம்' என்பர் வள்ளுவனார். ஆனால் இற்றைச் சூழலில் இயற்கைக்கு இடமே இல்லை. செயற்கை வாழ்வின் போலித்துறை கண்டு மயங்கும் இளைஞர் மாட்டு அவ்வப்போது தோன்றி மறையும் காம வுணர்வே தலைதூக்கி நிற்கின்றது. நாடி நரம்புகளின் எழுச்சியின் வேகத்திற்கு, "காதல்" என்று தவறாகப் பெயர் சூட்டிவிட்டு, உண்மைக் 'காதல் உணர்வு' எது என்று தெரியாமல் தவிக்கின்றனர். 'காதல்' உணர்ச்சியின்பாற்பட்டதுதான் என்றும், அறிவோடு கலந்து இயங்காத உணர்ச்சி தவறான வழிகளுக்கும், தவறான முடிவுகளுக்குமே இழுத்துச் செல்லும் என்பது தெளிந்தோர் கூற்று.

## திருமண நன்றி

ஊர்தொறு மிருந்தெனக்கே
உயர் வாழ்த்து நல்கி யோர்க்கும்,
நேர்வந்து நின்றே யென்னை
நெஞ்சார வாழ்த்தி யோர்க்கும்,
சீர்மலி பரிசில் தந்து
சென்றிட்ட நண்பர் கட்கும்
கூர்த்தெழும் மகிழ்ச்சி நெஞ்சால்
கூறிடும் நன்றி கொண்மின்!

காரை இறையடியான்

[5-ஆம் பக்கத்தொடர்ச்சி]

## மாண்புமிகு மறைமலை அடிகளார்……

தன்மையையும், 'இந்தி' பொதுமொழி என்பதிலுள்ள பொய்மையையும், தகுதியற்ற இந்தியைப் பொதுமொழியாக்கும் புன்மையையும், இந்தி எதிர்ப்பியக்கத் தலைவராக மறைமலையடிகள் எடுத்துரைத்தனர். அம்மட்டில் நில்லாது தீந்தமிழின் தனித்தன்மை, பொதுமொழியாவதற்குத் தமிழுக்குள்ள சிறப்புத்தன்மை போன்றனவற்றை எழுத்தோவியங்களாக்கினர். விளைவு–இடைக்கால வெற்றி.

இனித் தமிழின மக்களை நோக்கினர்; இன்ப மலர்கள் பூத்துக்குலுங்கும் அழகுப் பூங்காவாகத் திகழ்ந்த தமிழகம், பிறர் வரவால், ஊடுருவலால், கள்ளியும் நெருஞ்சியும் நிறைந்த காடாக மாறியிருந்தது. அன்பிற்கும், அறத்திற்கும், ஒழுக்கத்திற்கும் முதன்மையளித்த மக்கள், செருக்கிற்கும், தீண்டாமைக்கும் தீச்செயல்கட்கும் இடந்தந்திருந்தனர். ஆயிரங் கடவுளரை வணங்கல், ஆடு, கோழி, பலி கொடுத்தல் அவர்தம் பொழுதுபோக்காயின. பொதுநலம் பேணாது, தம் வீடு, தம் மக்கள், தம் செல்வம் எனத் தந்நலம் பேணும் மாக்களாக மாறினர். தாயன்ன தமிழ்மொழியைப் போற்றிலர்; உடன் பிறப்பன்ன தமிழ் மக்களின் நலம் பேணிலர்; ஆனால் எவ்வெவ் மொழிக்கோ சிறப்புச் செய்தனர்; எவரெவரையோ போற்றினர்.

இத்துணை இழிநிலைகளைக் கண்டார் மறைமலையடிகளார்; உள்ளங் குமுறியது; செயல் சிறக்கத் தொடங்கிற்று.

சாதி, சமய வேறுபாடுகளைக் கடி தீண்டாமையை மறுத்தும், தமிழ் வழிப தமிழ்க்கல்வி ஆகியவற்றைச் சிறப்பித்து மகளிர் கல்வியைப் போற்றியும், மகளி மறுமணத்தை வரவேற்றும், கலப்பு மணத்தை புகழ்ந்துரைத்தும், அன்பு, அருள், பகுத்துணரும் ஆற்றல் ஆகிய மக்களினப் பண்புகளை வலியுறுத்தியும் தமிழ் கூறு நல்லுலகம் முழுமையிலும் அடிகளார் சொற்பெருக்காற்றினர்.

இந்நாட்டின் கண்ணுள்ள குருக்கள், சமயத்தின்பேரால் சடங்குகள், கிரியைகள் வகுத்து, மூடப் பழக்கவழக்கங்களை வளர்த்து, ஏழைக் குடிமக்கட்குரிய சிறு பொருளையும் உறிஞ்சி, அவர்களை வறுமைக்கு இரையாக்கி வருவதை இடித்துரைத்தார்.

'நமது இனிய செந்தமிழை மறப்பதும், அதனைப் பயிற்சி செய்யாமற் கைவிட்டிருப்பதும், நமது உயிரையே நாம் அழிப்பதாய் முடியும்' என அறிவுறுத்தினர்.

இங்ஙனம் மறைமலையடிகளார் ஆராய்ச்சியாளராக, எழுத்தாளராக, நாவலராக, பாவலராகச், சீர்திருத்தச் செம்மலாக, அஞ்சா நெஞ்சத்துடன் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்கட்கும், தமிழ்நாட்டிற்கும் செய்துள்ள அரும்பணி பெரிது! பெரிது!! மலையினும் கடலினும் வானினும் பெரிது!!!

[19-ஆம் பக்கத்தொடர்ச்சி]

## வள்ளுவர் ஆண்டும் கிருத்துவின்……

டனர். அவ்வாறு கொண்டதால் கிருத்துவ மதம் கெட்டு விட்டதா! அன்றியும் உரோமைக் கழிபெரும் இழிகாமக் கதைகளிலும் இழிந்ததா வள்ளுவம்?

இதுகாறும் கூறியவற்றால், வள்ளுவராண்டை ஆராய்ந்தவர்கள் குறுகிய நோக்கம் உடையவரல்லர் என்பதும், வள்ளுவராண்டு முறை தமிழ்நாட்டில் தமிழராய்ப் பிறந்த அனைவருக்கும் பெருமையளிப்பது என்பதும், நாட்டுப்பற்று, மொழிப்பற்றுக்கொண்டவரைச் சமயப்பற்று அற்றவர் என இகழ்தல் பொருந்தாதது என்பதும், வள்ளுவராண்டு முறை இந்தியாவெங்கும் பரவாததாயினும் அஃது அண்மைக் காலத்தே தோன்றியதாயினும் பெருமைக்குரியதே என்பதும், வள்ளுவராண்டின் தொடக்கம் தொன்மை பற்றிக் கருத்து வேறுபாடு இருப்பினும் பலரும் ஒப்புக்கொண்டு பயின்று வழங்கப்பெற்ற ஆண்டு முறை ஆதலால் ஏற்றுக்கொள்வதே உலகொடு ஒட்ட ஒழுகுவதாகும் என்பதும், வள்ளுவராண்டைப் பயன்படுத்துவதால், உலக ஒற்றுமை உணர்வு கெட்டழிந்துவிடும் எனக் கூறித்திரிவது உண்மைக்கு முரணானது என்பதும், வள்ளுவர் உலக உறவை ஊட்டுதற்கு உதித்த உன்னத உலகப் பெரியாருள் ஒருவர் என்பதும் அறிவோமாக.

மொழிப்பற்றுக்குச் சீரிய எடுத்துக்காட்டு கிருத்து பெருமான் ஆதியில் திருவாக்கு திகழ்ந்தது. அவ்வாக்கு கிருத்து வடிவானது என்று வாக்கு வடிவமாகக் கிருத்து போற்றப்படுகிறார். அவர் தம் திருச்செய்தியை, அவர் காலத்து உலகப் பெருமொழிகளாகிய இலத்தீனிலோ கிரேக்கத்திலோ பரப்பாது, தன் தாய்மொழி, அரமெயிக், மிகமிகச் சின்னஞ்சிறு மொழியாயினும், அம்மொழியிலே பேசியது அவரது தாய்மொழிப்பற்றை விளக்குவதாகும்.

வெளியிடுபவரும் அச்சிடுபவரும் டாக்டர். சி. இலக்குவனார். அச்சிட்டது: குறள்நெறி அச்சகம்
திருப்பரங்குன்றம், மதுரை-5. தொலைபேசி எண்: திருநகர் 65